لا إله إلا الله محمد رسول الله

# நபி வழி

## உண்மை இஸ்லாத்தின் கொள்கை விளக்க இதழ்





மே- 2009 விலை ரூபாய் 7/-

# குடும்ப வாழ்க்கை

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் அவர்கள் "எங்கள் இறைவா! எங்கள் மனைவிகளையும் எங்கள் குழந்தைகளையும் எங்கள் கண்களுக்கு குளிர்ச்சி அளிக்கக் கூடியவர்களாக ஆக்குவாயாக! மேலும் எங்களை இறையச்சம் உடையவர்களுக்கு முதன்மையானவராக ஆக்குவாயாக!" என்று வேண்டுவார்கள். (25:75)

## நபிமொழியிலிருந்து...

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "எவர் தன் மனைவியிடத்தில் மிகச்சிறந்த முறையில் நடந்து கொள்கிறாரோ அவர்தான் உங்களில் மிகச் சிறந்தவராவார் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் என் மனைவியிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்வதில் உங்களில் மிகச் சிறந்தவனாக விளங்குகிறேன் என்றும் கூறினார்கள்." (திர்மிதி)

எந்தப் பெண் வாழ்க்கைத் துணைவியாக இருக்க சிறந்தவள் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அதற்கு, பார்க்கும் போது மகிழ்வித்து, கணவர் கட்டளையிடும் பணியை செய்து, கணவர் விரும்பாதவற்றிலிருந்து விலகியிருக்கும் பெண் தான் மிகச் சிறந்த வாழ்க்கைத் துணைவி என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (நஸாயி)

"நம்பிக்கை கொண்ட ஆண், நம்பிக்கை கொண்ட தனது மனைவியுடன் பகைமை பாராட்டக் கூடாது. அவளுடைய ஒரு செயல் பிடிக்கவில்லை என்றால் வேறொரு செயல் பிடித்தமாக இருக்கலாம்." ( சஹீஹ் முஸ்லிம்)

## ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

"பெண்களின் உரிமைகளை இஸ்லாம் பாதுகாத்திருப்பது போன்று வேறு எந்த மார்க்கமும் பாதுகாக்கவில்லை. **வலஹுன்ன மிஸ்லுல்லதீ அலைஹின்ன** என்று இறைவன் சுருக்கமாக கூறிவிட்டான் (பார்க்க 2:229) அதாவது ஆண்களுக்கு பெண்கள் மீது உரிமை இருப்பது போலவே பெண்களுக்கும் ஆண்கள் மீது உரிமை இருக்கின்றது. உண்மையான இரண்டு நண்பர்களைப் போல கணவருக்கு மனைவியுடன் தொடர்பு இருக்க வேண்டும். மனிதனுடைய உயர் ஒழுக்கத்திற்கும், இறைவனோடுள்ள தொடர்புக்கும் முதல் சாட்சி அந்த மனைவி தான். அவளோடு அவருக்கு நல்ல தொடர்பு இல்லையென்றால் பிறகு இறைவனோடு எப்படி சமாதானம் உருவாக முடியும்? **கைருக்கும் கைருக்கும் லி அஹ்லிஹி**- தம் மனைவியுடன் நன்றாக நடந்து கொள்பவர் தான் உங்களில் மிகச் சிறந்தவர் என ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்."

தொடர் : 3

# தக்தீரே இலாஹி (இறை நியதி)

ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்கள்

அவர்கள் வசனத்தின் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கொண்டார்கள். மற்றதை அத்துடன் இணைத்துப் பார்க்கவில்லை. ஏனெனில் இந்த வசனத்திற்கு முந்தைய வசனம் இதுவாகும்.

'கால அதஃபுதூன மா தன்ஹிதூன்'

பொருள்: நீங்களே செதுக்கிக் கொண்டவற்றை நீங்கள் வணங்குகின்றீர்களா? (திருக்குர்ஆன் 37:96)

அரபி இலக்கண விதிப்படி, 'மா' என்ற சொல் சில நேரத்தில் வினைச் சொல்லுடன் சேர்ந்து வரும்போது பெயர் உரிச்சொல்லின் பொருளைத் தருகிறது. சில நேரங்களில் செயப்படு பொருளின் பொருளைத் தருகிறது.

எவர்கள் 'வல்லாஹு கலககும் வமா தஃமலூன்' என்ற வசனத்திற்கு அல்லாஹ் உங்களையும் படைத்துள்ளான்; உங்களது செயல்களையும் படைத்துள்ளான் என பொருள் கொள்கிறார்களோ அவர்கள் இந்த இடத்தில் பெயர் உரிச் சொல்லின் பொருளைக் கொடுக்கிறார்கள். ஆனால் இங்கு பெயர் உரிச் சொல்லின் பொருளைத் தராது என்பது முந்தைய வசனத்திலிருந்து தெளிவாகிறது. ஏனெனில் முந்தைய வசனமாகிய 'அதஃபுதுனமா தன் ஹிதூன்' என்பதை சேர்த்து படித்தால் - அதற்கு அல்லாஹ் உங்களையும், உங்களது செயல்களையும் படைத்துள்ளான் என பொருள் கொடுத்தால் இந்த வசனம் அர்த்தமில்லாது போய்விடும். மேலும் அடுத்துள்ள வசனம் முன்னுள்ள வசனத்தை மறுக்கிறது. ஏனெனில் முன்னுள்ள வசனத்தில், நீங்களே செதுக்கிக் கொண்டவற்றை நீங்கள் ஏன் வணங்குகின்றீர்கள் என வினவப்பட்டுள்ளது. பின்னுள்ள வசனத்தில், உங்களையும், உங்களின் செயல்களையும் இறைவன் படைத்துள்ளான் என கூறப்பட்டுள்ளது. இந்த சொற்றொடர் சம்பந்தமில்லாதது மட்டுமில்லாமல் நேர்மாறானதுமாகும். ஏனென்றால், இறைவனே அவர்களின் செயல்களைப் படைத்திருக்கும் போது, நீங்கள் சிலைகளை ஏன் வணங்குகின்றீர்கள் என அவர்களிடம் ஏன் வினவப்படவேண்டும்?

எனவே இந்த வசனத்திற்கு இந்த பொருள் இருக்கவே முடியாது. மாறாக, இந்த இரண்டு வசனங்களின் பொருள், நீங்கள் உங்கள் கைகளினாலேயே செதுக்கி உருவாக்கு கின்றவற்றை நீங்கள் வணங்குகின்றீர்களா என்ன? ஆனால் அல்லாஹ்வோ உங்களையும் படைத்துள்ளான்; நீங்கள் செதுக்குகின்ற வற்றையும் - அதாவது சிலைகளையும்- படைத்துள்ளான் என்பதாகும். மேலும் 'மா' எனும் உருபு முதல் வசனத்தில் தனக்குப் பின்னுள்ள வினைச் சொல்லுடன் சேர்ந்து செயப்படுபொருளின் அர்த்தத்தைக் கொடுப்பது போன்றே அடுத்துள்ள வசனத்திலும் செயப்படுபொருளின் அர்த்தத்தைக் கொடுக்கிறது. அதாவது மா தஃமலூன்' என்பது 'மஃமூலுக்கும்' என்பதாகும். அதாவது 'நீங்கள் செதுக்குபவற்றையும்.

(அல்லாஹ்தான் உங்களையும் படைத்துள்ளான்; நீங்கள் செதுக்குகின்ற சிலைகளையும் படைத்துள்ளான் என்பது இந்த (37:96-97) வசனங்களின் கருத்தாகும்.)

சுருக்கமாக, இந்த வசனத்திற்கு தவறான பொருள் கொடுக்கப்படுகிறது. இந்த வசனத்திற்கு முன்னுள்ள வசனமே இதற்கான அர்த்தங்களைத் தீர்த்து வைக்கிறது. இந்த வசனத்தில் மனித செயல்கள் (இறைவனால்) உருவாக்கப்படுவது பற்றிய எந்த குறிப்பும் இல்லை.

**இரண்டாவது வசனத்தின் சரியான பொருள்**

இந்த வசனத்தைத் தவிர வேறு சில வசனங்களையும் இம்மக்கள் எடுத்து வைக்கிறார்கள். அவற்றில் ஒன்றிரண்டு பெரிய வசனங்களைப் பற்றி இப்போது நான் கூறுகிறேன். (விதிக்கு சான்றாக) மக்கள் இந்த வசனத்தையும் எடுத்து வைக்கிறார்கள்:

''நீர் (அவர்களிடம்) கூறுவீராக, அல்லாஹ் எங்களுக்கு விதித்திருப்பதுதான் எங்களுக்கு ஏற்படும். அல்லாஹ்வே எங்கள் பாதுகாவலனாவான். மேலும் நம்பிக்கை யாளர்கள் அல்லாஹ்விடத்திலேயே நம்பிக்கை வைத்தல் வேண்டும்''. (9:51)

ஏற்கனவே மனிதனுடைய தலை யெழுத்தில் எழுதப்பட்டதே அவனுக்குக் கிடைக்கிறது என இறைவனே (இவ்வசனத்தில்) கூறுவதாக அவர்கள் கூறுகின்றார்கள். உணவு, உடை, செல்வம் போன்றவை இன்னாருக்கு இவ்வளவு இவ்வளவு கிடைக்க வேண்டும் என இறைவன் எழுதியதை விட குறைவாகவோ அல்லது அதிகமாகவோ மனிதனுக்கு கிடைப்பதில்லை.

அல்லது இன்னின்ன ஆட்களை இன்னின்ன வழிகளில் கொலை செய்ய வேண்டும் என்றோ, இன்னின்ன இடங்களில் இந்த ஆள் மூலமாக தூக்கில் தொங்க வேண்டும் என்றோ எழுதப்பட்டிருக்கும் போது மனிதனுக்கு என்ன அதிகாரம் உள்ளது? என அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் உண்மையில் இங்கு கூறப்பட்ட விஷயமே வேறாகும். இந்த இடத்தில் நிராகரிக்கப்பவர்களுடனுள்ள போர் பற்றி இறைவன் குறிப்பிடுகிறான். போரின் விளைவாக முஸ்லிம்களுக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால் நயவஞ்சகர்கள் மகிழ்ச்சி யடைகிறார்கள். மேலும் நாம் முன்னரே ஏற்பாடு செய்து விட்டிருந்தோம்; எனவே நாம் துன்பத்திலிருந்து தப்பிவிட்டோம். தன்னை விட வலிமை மிக்கவர்களுடன் போரிடுகின்ற முஸ்லிம்கள் மடையர்களாவர் என்று அந்நயவஞ்சகர்கள் கூறுகின்றனர். அல்லாஹ் கூறுவதாவது, நீங்கள்தான் மடையர்கள்; குருடர்கள். முஸ்லிம்கள் தோல்வி யடைவார்கள். மேலும் நிராகரிப்பவர்கள் வெற்றி பெற்று விடுவார்கள் என நீங்கள் நினைக்கின்றீர்கள். ஆனால் அது நடக்காது. ஏன்? ஏனெனில் தனது தூதர் எப்பொழுதும் வெற்றிபெறுவார் என்று இறைவன் நியமிக்கப்பட்ட நடைமுறையின்படி, முஸ்லிம்கள் வெற்றி பெறுவார்கள் என்று அவன் விதித்துள்ளான்.

எனவே, ஒவ்வொரு செயலும் இறைவனின் கட்டளைக்கேற்ப நடக்கிறது என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை. மாறாக, நம்பிக்கையாளர்கள், நிராகரிப்போரை முறியடிப்பர்; மேலும் வெற்றி பெறுவர் என்ற விஷயம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதை மட்டுமே குறிப்பிடுகிறது. அவ்வாறல்லாமல் வழிப்பறிசெய்தல், திருடுதல், கொள்ளையடித்தல், பொய்யுரைத்தல் ஆகியவை குறித்து இறைவன் எழுதி விட்டிருக்கிறான் என்பதல்ல. இதனை இறைவனே திருக்குர்ஆனின் பிறிதோரிடத்தில், 'நானும் எனது தூதர்களும் கண்டிப்பாக வெற்றி பெற்றே தீருவோம் என அல்லாஹ் எழுதியுள்ளான்' என்று கூறியுள்ளான். (காண்க 58 : 22)

ஆகவே, இந்த வசனத்தில் 'எழுதியுள்ளான்' என்பது மனித செயல்களைக் குறித்தல்ல. மாறாக, இறைதூதர் மற்றும் நம்பிக்கையார் களின் வெற்றியை குறித்ததாகும்.

**மூன்றாவது வசனத்தின் சரியான பொருள்:**

பின்னர் (விதிக்கு சான்றாக) அவர்கள் இன்னொரு வசனத்தையும் முன் வைக்கின்றனர்.

''நிச்சயமாக நாம் ஜின்களிலும் மனிதர்களிலும் பெரும்பாலானவர்களை **நரகத்திற்காகப் படைத்திருக்கிறோம்.** அவர்களைப் புரிந்துகொள்ளும் அடையா ளங்கள் என்னவெனில், அவர்களுக்கு உள்ளங்கள் இருந்தும் அவற்றால் அவர்கள் புரிந்து கொள்வதில்லை. அவர்களுக்குக் கண்கள் உண்டு. ஆயினும் அவர்கள் காண்பதில்லை. அவர்களுக்குக் காதுகள் உண்டு; ஆயினும் அவர்கள் கேட்பதில்லை. அவர்கள் கால் நடைகளைப் போன்றவர்க ளாவர். இன்னும் சொல்லப் போனால், அவர்கள் அவற்றை விடவும் மிகக் கெட்டவர்களாவர். உண்மையில் அவர்கள் கவனமற்றவர்களே ஆவர்''. (7:180)

இந்த வசனத்தை எடுத்துக் கொண்டு அவர்கள், பாருங்கள்! நரகத்திற்காக ஜின்களையும், மனிதர்களையும் நான் படைத்துள்ளேன் என இறைவனே கூறுகின்றான். இறைவனே பலரை நரகத்திற்காகப் படைத்திருக்கும்போது அவர்களை தீய செயல்கள் செய்வதை விட்டும் யாரால் தடுத்து நிறுத்த முடியும்? நரகத்தின் பக்கம் அவர்களை இழுத்துச் செல்லும் செயல்களைச் செய்வது அவர்களுக்கு கட்டாயமாகி விட்டது எனக் கூறுகின்றனர்.

ஆனால் இந்த வசனத்திற்குக் கொடுக்கப்படும் பொருளும் தவறானதாகும். அரபி மொழியில் 'லாம்' என்ற எழுத்து சில நேரத்தில் காரணத்தைத் தெரிவிப்பதற்கும், இன்னும் சில நேரத்தில் விளைவைத் தெரிவிப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மொழி வழக்கில் அதனை 'லாமுல் ஆகிபா' என்பர். இங்கு 'லி ஜஹன்னம' என்பதில் உள்ள 'லாம்' இந்த நோக்கத்திற்காகவே வந்துள்ளது. நரகத்தில் நுழைப்பதற்காகவே நாம் ஜின்னையும் மனிதனையும் படைத்துள்ளோம் என்பது அதற்குப் பொருளல்ல. ஏனெனில் இந்தப் பொருள், மற்ற வசனங்களுக்கு நேர் மாற்றமானதாகும். உதாரணமாக, நான் ஜின்களையும், மனிதனையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன் என அல்லாஹ் கூறுகிறான். (காண்க 51 : 57).

இறை அடியாரைக் குறித்து, ஃபத்குலீ ஃபீ இபாதீ இறை அடியாரின் தங்குமிடம் சுவர்க்கமாகும் என்று அல்லாஹ் கூறுகிறான். (காண்க 89 : 30-31)

ஆகவே இந்த வசனங்கள் இருக்கும்போது, 'வலகத் ஸரஃனா லிஜஹன்னம' என்பதற்கு, அல்லாஹ் பலரை நரகத்திற்காகப் படைத்துள்ளான் என்று பொருள் கொள்ளவே முடியாது.

மனிதன் இறைவனின் அடியானாக ஆகுவதற்கும், சுவர்க்கத்திற்கு உரியவனாக ஆகுவதற்குமே படைக்கப்பட்டுள்ளான். (அல்லாஹ் நரகத்திற்காகப் படைத்துள்ளான் என்ற) இந்தப் பொருள் சரியில்லையென்றால் வேறொரு பொருள் கொடுக்க வேண்டியது வரும். இங்கு வந்துள்ள 'லாம்' என்பதும் லாமுல் ஆகிபா (விளைவைக் குறிப்பிடும் லாம்) என்ற பொருளில்தான் வந்துள்ளது. எனவே இந்த வசனத்தின் பொருள் நாம் மனிதனைப் படைத்துள்ளோம். ஆனால் அவன் சுவர்க்கவாசியாக ஆகுவதற்குப் பதிலாக நரகத்திற்கு உரியவனாக ஆகிவிட்டான் என்பதாகும். இந்த பொருளில் 'லாம்' அரபி மொழியில் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. மேலும் திருக்குர்ஆனிலும் மற்ற இடங்களில் இந்த பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

அரபி மொழி நடையில் அதற்கு பின்வரும் கவிதை ஓர் உதாரணமாகும்.

''அம்வாலுனா **லி** ஸவில் மிய்ராஸி நஜ்மவுஹா. வதுவரனா **லி** கராபித்தஹ்ரு நப்னீஹா.''

பொருள்: வாரிசுகள் எடுத்துச் செல்வதற்காக நாம் செல்வங்களைச் சேகரிக்கிறோம். காலம் நாசமாக்க வேண்டும் என்பதற்காக நாம் வீடுகளைக் கட்டுகிறோம்.

செல்வங்களை சேகரிப்பதற்கும் வீடுகளைக் கட்டுவதற்கும் உள்ள நோக்கம் இதுவல்ல என்பது வெளிப்படை. ஆயினும் ஏற்படும் விளைவு இதுதான்.

கவிஞரின் நோக்கம், மக்கள் செல்வங்களை சேகரிக்கிறார்கள். ஆனால் உறவினர்கள் அவற்றை எடுத்துச் செல்கின்றனர். அவ்வாறே மக்கள் வீடுகளைக் கட்டுகின்றனர். ஆனால் விளைவோ, காலங்கள் அந்த வீடுகளை நாசமாக்கி விடுகின்றன என்பதாகும்.

திருக்குர்ஆனில் மிகவும் தெளிவான உதாரணம் கஸஸ் எனும் அதிகாரத்தில் வந்துள்ளது. அங்கு இறைவன் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் குறித்து இவ்வாறு கூறுகின்றான்:

ஃபல்தககதஹு ஆலுஃபிர்அவ்ன லியகூன

லஹும் அதுவ்வன் வ ஹஸனா (28:9)

அதாவது ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களை அவரது தாயார் நதியில் போட்ட போது, அவரை ஃபிர்அவ்னின் மக்கள், அவர் பெரியவராகி அவர்களுக்கு **விரோதியாக ஆகுவதற்காகவும், அவர்களின் துயரத்துக்குக் காரணமாக ஆகுவதற்காகவும்** எடுத்துக் கொண்டனர்.

ஆனால் ஃபிர்அவ்னின் குடும்பத்தவர்கள் மூஸாவை எடுத்துக் கொண்டபோது அவர்களின் நோக்கம் இதுவாக இருந்திருக்க முடியாது என்பது தெளிவான விஷயம். அடுத்த வசனத்திலிருந்தே தெரிவதைப் போன்று, அவர்களின் நோக்கம் இதுவாக இல்லாதிருந்தது மட்டுமல்லாது அதற்கு மாற்றமாக இருந்தது. ஏனெனில் அடுத்த வசனத்திலேயே, ஃபிர்அவ்னின் மனைவி ஃபிர்அவ்னிடம் இவ்வாறு கூறியதாக அல்லாஹ் கூறுகின்றான்:

''இவன் நமக்குப் பயனளிக்கலாம்: அல்லது நாம் இவனை மகனாக ஆக்கிக் கொள்ளலாம் என்றாள். ஆனால் அவர் பெரியவராகி, அவர்களின் அழிவிற்குக் காரணமாவார் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.'' (28:10)

எனவே இந்த வசனத்தின் பொருள், ஃபிர்அவ்னின் குடும்பத்தினர் அவரை எடுத்துக் கொண்டனர். ஆனால் கடைசியில் அந்த குழந்தை அவர்களுக்கு எதிரியானது. மேலும் அவர்களின் துயரத்திற்கு காரணமாக அமைந்தது என்பதாகும். மேலும் இதே பொருள்தான் நரகத்திற்காக நாம் படைத்திருக்கிறோம் என்பதில் 'லாம்' என்ற சொல்லுக்கு உண்டு.

(அதாவது, மனிதன் இறை நெருக்கத்தைப் பெற்று சுவர்க்கத்தை அடைய வேண்டும் என்பதற்காக நாம் அவனைப் படைத்தோம். ஆனால் அவன் தன் தீய செயலின் காரணமாக நரகத்திற்குக் காரணமாகி விட்டான். )

ஆகவே இந்த வசனத்திலிருந்து இறைவன் சிலரை நரகவாசிகளாகவும், இன்னும் சிலரை சொர்க்கவாசிகளாகவும் வலுக்கட்டாயமாக ஆக்குகிறான் என்று ஆதாரம் எடுப்பது சரியல்ல.

**நான்காவது வசனத்தின் சரியான பொருள்:**

இவ்வாறே (விதிக்கு சான்றாக அவர்கள்) இந்த வசனத்தையும் எடுத்து வைக்கிறார்கள்:

மேலும் மூஸா கூறினார்: எங்கள் இறைவா! நீ ஃபிர்அவ்னுக்கும் அவனுடைய சமுதாயத் தலைவர்களுக்கும் **அவர்கள் மக்களை வழி கெடுக்க வேண்டும் என்பதற்காக** உலக வாழ்க்கையில் அலங்காரத்தையும் செல்வங்களையும் வழங்கியுள்ளாய். (10:89)

இந்த வசனத்திலும் **மக்களை வழிகெடுப்பதற்காக** அவர்களுக்கு

செல்வங்கள் கொடுக்கப்பட்டன **என்பது பொருளல்ல**. மாறாக, சென்ற வசனங்களைப் பற்றி நான் கூறி வந்துள்ளதைப் போன்று இங்கும் லாம் என்பது லாமுல் ஆகிபா (விளைவைத் தெரிவிக்கக் கூடிய லாம்) ஆகும். அதாவது, இறைவா! மக்களை வழிகெடுக்க வேண்டும் என்பதற்காக நீ அவர்களுக்கு செல்வங்களை வழங்கவில்லை. எனினும் அவர்கள் அப்படியே செய்கிறார்கள்.

### ஐந்தாவது வசனத்தின் சரியான பொருள்

பின்னர் அவர்கள் கூறுகின்றார்கள். ஒரு வசனம் (விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்ற) எங்களது கூற்றை முற்றிலும் தெளிவாக்கிவிட்டது. அது வருமாறு:

''நீங்கள் எங்கிருந்தாலும் - வலிமை வாய்ந்த கோட்டைகளில் நீங்கள் இருந்தாலும் சரியே - மரணம் வந்து உங்களைப் பிடித்துக் கொள்ளும். (மேற்கூறப்பட்ட) அவர்களுக்கு ஏதேனும் நன்மை ஏற்பட்டால், இது அல்லாஹ் விடமிருந்து வந்ததென்று கூறுகின்றனர். அவர்களுக்கு ஏதேனும் தீமை ஏற்பட்டால் இது உம்மிடமிருந்து வந்ததென்று கூறுகின்றனர். எல்லாமே, அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்று நீர் கூறுவீராக. இந்த விஷயத்தைக் கூட இவர்கள் புரிந்து கொள்ளவில்லையே! இவர்களுக்கு என்ன நேர்ந்தது?'' (4:79)

பாருங்கள். நன்மை, தீமை எல்லாமே இறைவன் புறமிருந்து வருகின்றன என்பது இந்த வசனத்திலிருந்து தெரிகிறது என்று அவர்கள் கூறுகின்றனர். ஆனால், ஒவ்வொரு செயலின் - அது நல்லதாயினும், தீயதாயினும் - விளைவு அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கின்றன என்பதை அவர்கள் புரியவில்லை.

ஒவ்வொரு செயலின் நற்கூலியோ, தண்டனையோ இறைவன் புறமிருந்தே கிடைக்கின்றன என்பதை யார் மறுக்கிறார்கள்? அப்படியே நன்மையும் தீமையும் இறைவன் புறமிருந்தே வருகின்றன என ஏற்றுக் கொண்டாலும், அதில் எவ்வித குற்றமும் இல்லை. உண்மை என்னவென்றால் சில நேரங்களில் ஊழியரின் செயலும் எஜமானின் செயலாகவே கருதப்படுகிறது. அச்செயலைப் பற்றிய நோக்கம் எஜமானுக்கு இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரியே. உதாரணமாக, ஓர் எஜமானரின் ஊழியர் ஒருவருக்கு துன்பம் இழைத்தால் தன் ஊழியர் பிறருக்கு துன்பம் கொடுக்க வேண்டும் என்பது எஜமானனின் நோக்கம் இல்லையென்றாலும் உங்களால் எங்களுக்கு துன்பம் வந்தது என்று நாம் சில நேரத்தில் எஜமானரைப் பார்த்துக் கூறிவிடுகிறோம். இவ்விதமாக ஊழியரின் துன்பம் இழைக்கும் செயலை எஜமானரின் செயலாக கூறிவிடுகிறோம்.

இந்த விதிமுறைப்படி இந்த வசனத்திற்கு பொருள் கொடுப்போமாயின் எந்த பொருட்களை தவறாக பயன்படுத்துவதன் காரணமாக பாவங்கள் பிறக்கின்றனவோ அப்பொருட்கள் இறைவனால் படைக்கப்பட்ட வையாகும். எனவேதான் இறைவனைக் குறித்து நன்மையும் தீமையும் அவன் புறமிருந்தே வருகின்றன என கூறப்பட்டது என்று பொருள்படும். இவ்விதமாக பொருள் கொள்வதால் செயல்களில் பலவந்தம் உண்டு என நிரூபணமாகாது. இறைவன் வலுக் கட்டாயமாகப் பிடித்து தீமையைச் செய்ய வைக்கிறான் என்ற முடிவுக்கு ஒருபோதும் நாம் வரவேண்டியதில்லை. மாறாக, இறைவன் மனிதனிடத்தில் சில ஆற்றல்களைப் படைத்துள்ளான்: அவற்றைத் தவறாகப் பயன்படுத்தி மனிதன், கற்பழிப்பு திருட்டு ஆகியவற்றைச் செய்கிறான் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

நான் முன்னர் கூறிய அதே பொருள்தான் இந்த வசனத்திற்கும். அதாவது, இங்கு செயல்கள் பற்றி குறிப்பிடவில்லை. இன்ப துன்பங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. முதலில் இறைவன் நயவஞ்சகர்களிடம், நீங்கள் எங்கிருந்த போதிலும் மரணம் உங்களை

வந்தடையும் என்று கூறுகிறான். அதாவது உங்களின் தீய செயல்களின் காரணமாக உங்களுக்காக அழிவின் தண்டனையை இறைவன் ஏற்படுத்தியுள்ளான். இப்போது இது தீர்மானிக்கப்பட்டு விட்டதால், நீங்கள் எவ்வளவு எச்சரிக்கையாக இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாது.

பின்னர் கூறுகிறான். இவர்கள் நன்மை இறைவன் புறமிருந்தும் தீமை உம்மிடமிருந்தும் வருவதாகக் கூறுகின்றனர். இது அவர்களின் அறிவீனமாகும். நற்கூலி, தண்டனை கொடுப்பதில் உமக்கு என்ன தொடர்பு இருக்கிறது? இன்பமும் துன்பமும் செயலின் விளைவுகள் என்ற முறையில் அல்லாஹ்வின் புறமிருந்து வருகின்றன. அதாவது இன்னாருக்கு இன்ன செயலின் விளைவாக இன்ன நன்மை அல்லது இன்ன தீமை ஏற்பட வேண்டும் என்பதை அல்லாஹ் தீர்மானிக்கின்றான். இதில் உமக்கு என்ன தொடர்பிருக்கிறது? இது இறைவனுடைய வல்லமையாகும். இதனை அவன் எந்த அடியாருக்கும் கொடுக்கவில்லை. எனவேதான், இவர்கள் இந்த சிறு விஷயத்தைக் கூட புரிந்துகொள்ள வில்லையே. இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று இறைவன் கூறுகிறான். அடுத்த வசனத்திலேயே இதனை மேலும் விளக்கிக் கூறுகிறான்:

ஏதேனும் நன்மை உமக்குக் கிடைத்தால் அது அல்லாஹ்விடமிருந்தே கிடைக்கிறது. மேலும் ஏதேனும் தீமை உமக்குக் கிடைத்தால் அது உம்மிடமிருந்தே. (4:80)

இப்போது, எல்லா செயல்களும் இறைவன் புறமிருந்தே உருவாகின்றன என்று முதல் வசனத்திற்குப் பொருள் கொண்டால், இந்த வசனத்திற்கு எந்த பொருளும் கொள்ள முடியாது. நான் கொடுத்த பொருளையே முதல் வசனத்திற்குக் கொடுத்தால்தான் இந்த வசனத்திற்கு அர்த்தம் ஏற்பட முடியும். இந்த விதத்தில் பார்க்கும்போது இரண்டாவது வசனம் இவ்வாறு பொருள்படும்: நல்ல பிரதிபலன் இறைவன் புறமிருந்தாகும். ஏனெனில் நன்மையைப் பற்றிய தூண்டுதல் அவன் புறமிருந்தே வருகிறது. துன்பம் ஏற்பட்டால் அது மனிதன் புறமிருந்து ஏற்படுவதாகும். ஏனென்றால் தீமை தவற்றினால் ஏற்படும் விளைவாகும். மேலும் தவறு பற்றிய தூண்டுதல் அல்லாஹ்வின் புறமிருந்து ஏற்பட வாய்ப்பில்லை.

**ஆறாவது வசனத்தின் சரியான பொருள்:**

மேலும் (விதிப்படியே எல்லாம் நடக்கும் என வாதிடும்) அவர்கள் கூறுவதாவது, இன்னொரு வசனம் பொருளை மிகவும் தெளிவு படுத்திவிட்டது. அது வருமாறு:

நீங்கள் உங்கள் வீடுகளில் இருந்தாலும் எவர்களைப் பற்றி கொலையுண்டு போக வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதோ அவர்கள், தாம் கொலையுண்டு கிடக்க வேண்டிய இடங்களை நோக்கிக் கட்டாயம் வெளியேறியிருப்பார்கள். (3:155)

எல்லாம் இறைவனே செய்கிறான் என்பது இதிலிருந்து தெளிவாகிறது (என்கின்றனர்).

இதற்குரிய விடையாவது, முதலில் முந்தைய வசனங்களைப்பற்றி நான் ஏற்கனவே கூறியிருப்பதைப் போன்று இங்கும் செயலின் விளைவைப் பற்றித்தான் கூறப்பட்டுள்ளது; செயலைக் குறித்து கூறப்படவில்லை. இந்த வசனம் உஹத் போர் பற்றியதாகும். இந்தப் போரில் நயவஞ்சகர்கள் ஆரம்பத்தில் போர் செய்வதற்காக முஸ்லிம்களுடன் வெளியேறி னார்கள். ஆனால் ஆயிரம் பேர்களில் முந்நூறு பேர்கள் குறித்த சமயத்தில் திரும்பி வந்து விட்டார்கள். இவ்வாறு அவர்கள், நாம் முஸ்லிம்களை ஏமாற்றி போரில் சிக்க வைத்து விட்டு வந்து விட்டோம் என தாமாகவே கருதினார்கள். எதிரிகளின் முன் சென்று திரும்பி விடுதல் கடினமான விளைவை ஏற்படுத்துவதாகும். மேலும் போருக்குப் பிறகு, நீங்கள் தேவையில்லாமல் தம்மைத் தாமே

அபாயத்தில் ஆழ்த்தி விட்டீர்கள் எனக் கூறி அந்நயவஞ்சகர்கள் முஸ்லிம்களை கிண்டலடிக்க ஆரம்பித்தார்கள். இதற்கு விடையாகவே இறைவன் கூறுகிறான்: மூடர்களே! நாம் முஸ்லிம்களுடன் சென்று அவர்களை மாட்ட வைத்து விட்டு வந்துவிட்டோம். நம் உதவியின் மீது நம்பிக்கை வைத்துதான் இவர்கள் (முஸ்லிம்கள்) போரிடச் சென்றார்கள் எனக் கருதுகின்றீர்கள் என்றால், நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். நீங்கள் பாதுகாப்பான கோட்டைகளில் இருந்தாலும் – அதாவது மதீனா போன்ற பாதுகாப்பற்ற இடம் ஒருபுறமிருக்கட்டும் - கோட்டைகளின் பாதுகாப்பு இருந்தாலும் கூட எவர்களின் மீது போர் செய்வது கடமையாக்கப்பட்டுள்ளதோ அவர்கள் நிராகரிக்கப்போரை எதிர்த்துப் போரிட பயப்படுவதில்லை. வெளியே சென்று எதிரிகளுடன் கண்டிப்பாகப் போரிடுவார்கள்.

ஆகவே இங்கு கூறப்பட்டுள்ள 'குதிப' என்பதற்கு விதிக்கப்பட்டுள்ளது என்று பொருளாகாது. மாறாக கடமையாக்கப் பட்டுள்ளது என்று பொருள்படும். 'குதிப அலைக்குமு ஸ்ஸியாமு' (நோன்பு உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது) என்பதிலும் இதே பொருளைத்தான் கொடுக்கிறோம். மேலும் 'அல்கத்ல்' என்பதற்கு (தலைவிதிப்படி) கொலையுண்டு போதல் என்று பொருளல்ல; மாறாக கொலை செய்தல் என்று பொருளாகும். இந்த பொருளில் இந்த சொல் குர்ஆனில் பல இடங்களில் வந்துள்ளது. உதாரணமாக, அல்ஃபித்னது அஷத்து மினல் கத்ல், (கலகம், கொலை செய்வதைவிட மிகவும் கொடியது 2:192) ஃபலாயுஸ்ரிஃபு, ஃபில்கத்ல், (கொல்லப்பட்டவரின் வாரிசான) அவர் (கொலை செய்தவரைக்) கொன்று விடுவதில் எல்லையைக் கடந்து விடக் கூடாது. (17:34)மற்றும் இன்ன கத்ல ஹுமகான கதஅன் கபீரா, அவர்களைக் கொலை செய்வது நிச்சயமாக பெரும் குற்றமாகும். (17:32).

சுருக்கமாக, இந்த வசனத்தில் கூறப்பட்டிருப்பது என்னவென்றால், நம்பிக்கையாளர் அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறார்; ஒரு போதும் சோம்பேறித்தனம் காட்டமாட்டார். மதீனா நகரம் ஒன்றும் பாதுகாப்பான கோட்டையல்ல. முஸ்லிம்கள் வெளியில் செல்லாமலிருந்தாலும் நிராகரிப்பவர்கள் அங்கு வரமுடியும். கோட்டைகளின் பாதுகாப்பு இருந்தாலும் வெளியில் சென்று தாக்குதல் நடத்துமாறு முஸ்லிம்களுக்காக கட்டளையிடப் பட்டால் அப்போதும் கூட அவர்கள் அதனைத் தவறாகக் கருதமாட்டார்கள். ஆர்வத்துடன் தமது கடமையைச் செய்வார்கள்.

(தொடரும்)

**நபி வழி சந்தா விபரம்**

.ஆண்டு சந்தா - **ரூபாய் 80/-** தனி பிரதி - **ரூபாய் 7/-**

D.D அல்லது காசோலை மூலம் அனுப்புபவர்கள் K.NASIR AHMED என்ற பெயரில் அனுப்பவும்.மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்க : நிர்வாகி - **நபி வழி** மாத இதழ் **அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்** 11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி, , சென்னை - 600 024.

**National Watch Company**
Opposite to Bus Stand
Somanur, Tiruppur

**Chennai Hardwares**
241, Aroct Road, Chennai 600 026.
Ph : 2473 5373

## நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்

# ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்)

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 1928 ஆம் ஆண்டு டிசம்பர் 18ஆம் நாள் பிறந்தார்கள். அந்த ஆண்டுதான் அவர்கள் பிறந்த காதியான் சிற்றூருக்கு இரயில் பயண வசதி ஏற்பட்டது. அவர்கள் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் இரண்டாவது கலீஃபாவான ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களின் மகனாவார்கள். அவர்களின் தாயாரான ஹஸ்ரத் மர்யம் ஸித்தீகா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வம்ச பரம்பரையில் வந்தவர்கள் ஆவார்கள். மிகுந்த இறையச்சம் கொண்ட பெண்ணான அவர்கள் தமது மகன் திருக்குர் ஆனைக் கற்றுத் தேர்வதிலும், மார்க்கக் கல்வி பெறுவதிலும் மிகுந்த கவனம் செலுத்தினார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரலி) அவர்கள் தமது இளவயதில் மிகவும் சுறுசுறுப்பும் ஆர்வமும் கொண்ட குழந்தையாக விளங்கினார்கள். சிறுவயதில் விளையாட்டில் மிகுந்த ஆர்வமுடையவர்களாகத் திகழ்ந்தார்கள். அந்த ஆர்வம் அவர்களின் இறுதிக் காலம் வரை நீடித்தது. ஹாக்கி, கிரிக்கெட், பூப்பந்து, கால்பந்து போன்ற பல விளையாட்டுக்களில் ஆர்வமுடையவர்களாக இருந்தார்கள். தமது இளவயது முதலே ஜமாஅத்தின் பணிகளில் ஆர்வம் காட்டினார்கள். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தஹ்ரீகே ஜதீது திட்டத்தை அறிவித்த போது 9 வயதே நிரம்பிய சிறுவனாக இருந்த ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்கள் அந்தத் திட்டத்தின் பணிகளுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிம ஹுல்லாஹ்) அவர்களுக்கு 14 வயது ஆகியிருந்த போது அவர்களுடைய தாயார் சிலகாலம் நோய்வாய்ப்பட்டுப் பின்னர் இறந்தார்கள். இந்நிகழ்வு ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்களை மிகவும் பாதித்தது.

இளம் வயது முதலே அறிவைத் பெறுவதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். இஸ்லாமிய மார்க்கக் கல்வி மட்டுமல்லாது அறிவியல், வரலாறு, புவியியல் முதலிய உலகியல் கல்வியைக் கற்பதிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்கள். ரப்வாவிலுள்ள ஜாமிஆ அஹ்மதிய்யாவில் தம்முடைய இஸ்லாமியக் கல்வியைக் கற்றுத் தேறிய பின் தமது தந்தையுடன் இங்கிலாந்து பயணம் மேற்கொண்டார்கள். அந்தப் பயணத்தின் போது ஸ்விட்சர்லாந்து, ஜெர்மனி போன்ற நாடுகளுக்கும் சென்றார்கள். இந்தப் பயணத்தின் முடிவில் அவர்களுடைய தந்தையாரான ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் பாகிஸ்தான் திரும்ப எண்ணிய பொழுது, ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்கள் இலண்டனிலேயே தங்கி அங்குள்ள பல்கலைக்கழகத்தில் தமது மேற்படிப்பைத் தொடர்வது என முடிவு செய்யப்பட்டது. அப்போது ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு 26 வயது நிரம்பியிருந்தது. அங்குள்ள புகழ் பெற்ற கிழக்கத்திய மற்றும் ஆப்பிரிக்கக் கல்வி நிலையத்தில் சேர்ந்து பயின்றார்கள்.

மேலும் இலண்டன் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழி உச்சரிப்புக் கல்வியும் பயின்றார்கள். இலண்டனில் படித்துக் கொண்டிருந்த காலத்தில், இங்கிலாந்தின் பிற பகுதிகளிலும், ஐரோப்பாவிலும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மேற்கத்திய கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், கல்வி - கேள்வி ஆகியவற்றோடு அறிமுகம் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்களுடைய தந்தையார் அவர்களை ஐரோப்பாவிற்கு அனுப்பி வைத்ததற்கு இதுவும் ஒரு காரணம் ஆகும். ஐரோப்பாவிற்குச் செல்வதற்கு முன்பே ஷேக்ஸ்பியர், டிக்கன்ஸ், டோயல் போன்ற ஆசிரியர்களின் நூல்களைப் படித்ததன் மூலம் மேற்கத்திய இலக்கியங்களோடு ஒரு தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார்கள்.

இவ்வாறு ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஆரம்ப காலக் கல்வி இஸ்லாமிய அறிவியல், திருக்குர்ஆன், நபிமொழிகள், நபிவழி, இமாம் மஹ்தி (அலை) அவர்களின் நூல்கள் ஆகியவற்றோடு மேற்கத்திய நாடுகளின் அறிவியல், ஞானம் ஆகிய

அடித்தளத்தின் மீது உறுதியாக அமைந்தது.

இங்கிலாந்தில் தம் கல்வியை நிறைவு செய்தபின் 1957ஆம் ஆண்டு ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தம்மை ஜமாஅத் பணிகளில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்கள். அதே நேரத்தில் விளையாட்டிலும் ஆர்வம் செலுத்தினார்கள். குறிப்பாக பூப்பந்து விளையாடுவதில் ஆர்வம் காட்டினார்கள். ஒருமுறை அப்போதைய உலகப் பூப்பந்து வீரரான ஹாஷிம்கானை எதிர்த்து விளையாடும் வாய்ப்பைக் கூடப் பெற்றார்கள். சைக்கிள் ஓட்டுவதும், பூப்பந்து விளையாடுவதும், குதிரை ஏற்றம், நீச்சல், நடைப்பயிற்சி போன்ற உடற்பயிற்சிகளில் சிறந்து விளங்கினார்கள். வேட்டையாடுவதிலும் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார்கள். காலம் செல்லச் செல்ல ஜமாஅத்தில் அவர்களின் பொறுப்புகளும் அதிகரிக்கத் தொடங்கின. ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்களை வக்ஃப் ஜதீத் திட்டத்தின் பொறுப்பாளராக நியமித்தார்கள். அவர்கள் அஹ்மதிய்யா இளைஞர் அணி அமைப்பான மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் மேலிடத் தலைவராகவும் நியமிக்கப்பட்டார்கள். ஃபஸ்லே உமர் திட்டத்தின் இயக்குநராகவும் நியமிக்கப் பட்டார்கள். அஹ்மதிய்யா கட்டடக் கலை நிபுணர்கள், பொறியாளர்கள் அமைப்பின் தாளாளராகவும் செயல்பட்டார்கள். பிற்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முதியோர் அணி அமைப்பான மஜ்லிஸ் அன்சாருல்லாஹ்வின் மேலிடத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். அவர்கள் ஜமாஅத்தின் நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை இந்தப் பொறுப்பைக் கவனித்து வந்தார்கள்.

1957ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இலண்டனில் படித்துக் கொண்டிருக்கும்போது தாம் ஆஸிஃபா பேகம் ஸாஹிபா அவர்களைத் திருமணம் செய்ய விரும்புவதாகத் தம் தந்தையாருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர்களது தந்தையாரும் பெண் வீட்டாரை அணுகித் தம் மகனின் விருப்பத்தைத் தெரிவித்தார்கள். மணப்பெண் வீட்டாரும் விருப்பம் தெரிவித்ததால் அவர்களின் திருமணம் சிறப்பாக நடந்தேறியது. அவர்களின் மண வாழ்க்கையும் அருளுக்குரியதாக அமைந்தது. அவர்கள் இருவருக்கும் நான்கு பெண்மக்கள் பிறந்தனர். அவர்கள் ஸாஹிப்ஸாதி ஷவ்கத் ஜஹான் பேகம், ஸாஹிப் ஸாதி ஃபாயிஸா லுக்மான், ஸாஹிப்ஸாதி யாஸ்மின் ரஹ்மான் மோனா, ஸாஹிப் ஸாதி அத்தியத்துல் ஹபீப் தூபா ஆகியோர் ஆவர்.

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பே மார்க்க விஷயங்கள் மட்டுமல்லாது, பாகிஸ்தானில் இஸ்லாமியக் கோட்பாடுகளின் அடிப்படையில் அமைந்த தூய அரசியலைப் பரவச் செய்வதற்கு முனைப்போடு ஈடுபட்டார்கள். இந்த வகையில் அவர்களுக்கு பாகிஸ்தானிலுள்ள முன்னணி மார்க்க, அரசியல், இராணுவத் துறைகளின் முக்கியப் பிரமுகர்களோடு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. அந்நாட்டின் சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதில் சிறப்பான ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்கினார்கள். அந்நாட்டுத் தலைவர்கள் பலரும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஆலோசனை களைப் பெற்றுச் செயல்படுவதில் ஆர்வம் காட்டினார்கள். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களும் முக்கியமான பிரச்சினைகள் தொடர்பாக பெரும் தலைவர்களையும், முக்கியப் பிரமுகர்களையும் சந்தித்துப் பேசுவதற்கு ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்களையே அனுப்பி வைத்தார்கள். ஸுல்ஃபிகார் அலிபுட்டோ நாட்டின் பிரதமராக இருந்த பொழுது அவரைச் சந்திப்பதற்குக் கூட ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்களே அனுப்பி வைக்கப்பட்டார்கள். அப்போது புட்டோ ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்களை மிகவும் மரியாதையோடு வரவேற்று கண்ணியமாக நடத்தி வந்தார். பின்னாளில் அதே புட்டோ ஜமாஅத்திற்கெதிராகப் பல நடவடிக்கை களை மேற்கொண்டார் என்பது ஒரு தனிக் கதை.

1974ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் ஒரு கட்டமாக ஜமாஅத்திலிருந்து ஒரு குழுவை நேரில் வரவழைத்து ஜமாஅத்தின் கொள்கை கோட்பாடுகள் குறித்து விசாரிக்க முடிவு செய்யப்பட்டது. ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தலைமையில் கலந்து கொண்ட ஐவர் குழுவில் மிகவும் இளம் வயதினரான ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது அவர்களும் கலந்து கொண்டார்கள். அந்தக் குழுவினர் முன் சமர்ப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட மூன்று தலைப்புகளில் உள்ள வாதங்களையும் கருத்துக்களையும் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹ்) அவர்கள் தயாரித்தார்கள்.

1. அஹ்மதிகள் முஸ்லிம்கள் தாம் என்று அழைக்கப்படுவதற்கான நியாயமான காரணங்கள்.

2. இயற்றப்பட இருக்கும் சட்டத்தின் செல்லுபடித் தன்மையும், அதில் அடங்கியுள்ள ஆபத்துக்களும்.

3. பெருமானார் (ஸல்) அவர்களின் இறுதி நபித்துவம்.

மிகச் சிறப்பாகவும், திறமையாகவும், உண்மையோடும் ஜமாஅத்தின் சார்பில் வாதங்கள் எடுத்து வைக்கப்பட்ட பின்னரும் பாகிஸ்தான் அரசு ஒரு தலைபட்சமாக முடிவெடுத்து 'அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்லாத சிறுபான்மையினர்' என்று அவசரச் சட்டம் இயற்றியது.

### கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்படுதல்

இந்நிலையில் 1982ஆம் ஆண்டு ஜூன் மாதம் 9நாள் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா நாஸிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மரணமடைந்தார்கள். ஜூன் 10ஆம் நாள் ஜமாஅத்தில் கிலாஃபத் தேர்வுக்குழு ரப்வாவில் கூடி ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹஹுல்லாஹ்) அவர்களை வாக்களிக்கப் பட்ட மஸீஹின் நான்காவது கலீஃபாவாகத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களின் திருக்கரங்களில் முதலாவது நபராகப் பைஅத் செய்யும் வாய்ப்பை இமாம் மஹ்தி (அலை) அவர்களின் காலத்திலேயே பைஅத் செய்யும் வாய்ப்புப் பெற்ற ஹஸ்ரத் சௌத்ரி முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் அவர்கள் பெற்றார்கள். அதைத் தொடர்ந்து அப்போது அங்கு கூடியிருந்த 25,000 பேருக்கு அதிகமான அஹ்மதிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் நான்காவது கலீஃபாவின் திருக்கரங்களில் தங்களின் பைஅத் உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொண்டார்கள்.

### கிலாஃபத் காலத்தில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும், நிறைவேற்றப்பட்ட முதல் திட்டம் 'புயூத்து ஹம்து' திட்டமாகும். இத்திட்டத்தின்படி ரப்வா நகரிலும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள வீடில்லாத அஹ்மதிகளுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. அப்படி அமைக்கப் பட்டதுதான் ரப்வா நகருக்கு அருகிலுள்ள **புயூத்துல் ஹம்து** காலனியாகும். அங்கு ஏறத்தாழ 100 அஹ்மதி குடும்பங்கள் வாழ்கின்றன.

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுடைய கிலாஃபத்தின் ஆரம்பத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வுகளுள் ஒன்று, ஸ்பெயின் நாட்டில் பள்ளி வாசல் திறக்கப்பட்டதாகும். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ் ((ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட அந்தப் பள்ளிவாசல் 1982ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ஆம் நாள் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**இந்தப் பள்ளிவாசல் திறப்பு நிகழ்ச்சி அஹ்மதிய்யா வரலாற்றில் மட்டும் ஒரு முக்கிய நிகழ்ச்சியல்ல. முழு இஸ்லாமிய வரலாற்றிலும் ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும். ஏனென்றால் 700 ஆண்டுகளுக்குப்பின் ஸ்பெயின் நாட்டில் கட்டப்பட்ட முதல் பள்ளிவாசல் இதுவேயாகும்.**

### பாகிஸ்தானிலிருந்து வெளியேறுதல்

பாகிஸ்தான் அரசாங்கம் அஹ்திய்யா கிலாஃபத்தை முடக்கிப் போடுவதற்கும், இல்லாமற் செய்வதற்கும், பல்வேறு இரகசியத் திட்டத்தைத் தீட்டியது. இந்தச் சதித் திட்டங்கள்

எல்லாம் பல்வேறு அரசு உயர் அதிகாரிகள் மூலமாகவும், இரகசியச் செய்திகள், எச்சரிக்கைகள் வாயிலாகவும், கலீஃபா அவர்களுக்குத் தெரியவந்தன. ஆயினும். கலீஃபா அவர்கள் வழக்கம்போல் தமது ஜமாஅத் பணிகளைத் தொடர்ந்தார்கள். இந்நிலையில் 1984ஆம் ஆண்டு மார்ச் மாதம் இஸ்லாமாபாதிலிருந்து வந்த அமெரிக்கத் தூதரக அதிகாரி ஒருவரின் பயணத்தால் இந்தச் சந்தேகம் வலுத்தது. எனவே ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் நேரில் நிலைமையைக் கண்டறிய விரும்பி இஸ்லாமாபாதிற்குப் பயணம் மேற்கொண்டார்கள். அவர்கள் இஸ்லாமாபாதில் இருந்த பொழுது ஜமாஅத்தின் எதிரிகளும் அங்கு குழுமினர். அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு இரண்டு எச்சரிக்கை கடிதங்கள் கிடைத்தன. இவற்றில் ஒன்று பாகிஸ்தானின் அப்போதைய ஆட்சியாளராக இருந்த ஜெனரல் ஸியாவுல் ஹக்கிடமிருந்து வந்திருந்தது. அதில் அவர், ஆலிம்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு எதிராகக் கிளர்ச்சியில் ஈடுபட்டிருந்தாலும், அரசாங்கம் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களின் பாதுகாப்பிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருப்பதால் அவர்கள் அச்சமின்றி இருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் உளவுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவரிடமிருந்து வந்திருந்த மற்றொரு கடிதம் ஹஸ்ரத் ஸாஹிப் அவர்களை உடனடியாக இஸ்லாமாபாதை விட்டு வெளியேறும்படிக் கேட்டுக் கொண்டது. தம்மைத் தாக்குவதற்குச் சதித்திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து கொண்ட ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் உடனடியாக இஸ்லாமாபாதை விட்டு வெளியேறி ரப்வா சென்றடைந்தார்கள்.

அதற்கு அடுத்த மாதம் தான் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த அவசரச் சட்ட எண் XX-ஐ ஜெனரல் ஸியாவுல் ஹக் பிறப்பித்தார். இந்தச் சட்டம் அஹ்மதிய்யா ஜமாஅத்தைச் சேர்ந்த முஸ்லிம்களின் அடிப்படை உரிமைகளை அடியோடு பறித்துக் கொண்டது. உலகிலுள்ள பல தலைவர்ளும், அறிஞர்களும் இந்த காட்டுமிராண்டித்தனமான அவசரச் சட்டத்தை எதிர்த்துக் கண்டனக் குரல் எழுப்பினார்கள். அந்நேரத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தமது சொந்தப் பாதுகாப்பைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல் ஜமாஅத் உறுப்பினர்களின் நலத்திற்காக அதிக அக்கறை காட்டினார்கள். அப்போது அவர்கள் நிகழ்த்திய ஜுமுஆ பேருரைகளிலும், சொற்பொழிவுகளிலும் பாகிஸ்தான் ஆட்சியாளர் ஸியாவுல் ஹக்கிற்கு அறிவுரை கூறி எச்சரிக்கை செய்தார்கள். ஆனால் பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரோ, இந்த அறிவுரைகளில் அடங்கியிருந்த நியாயத்தையோ, அறிவுப்பூர்வமான எச்சரிக்கைகளையோ பொருட்படுத்தவில்லை. எனவே அவர் அவசரச் சட்ட எண் XX- ஐப் பிறப்பித்து அஹ்மதிகளுக்கு எதிரான அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டார். அதன் பலனை அவர் அனுபவித்ததற்கு அவரது சோகமுடிவு வரலாற்றுச் சான்றாகத் திகழ்கிறது.

அடக்குமுறைகளும், சதித்திட்டங்களும், ஓர் எல்லையைத் தாண்டிச் சென்ற பொழுது இனிமேலும் பாகிஸ்தான் மண்ணிலிருந்து ஜமாஅத்தை வழி நடத்துவது இயலாத காரியம் என்று தோன்றியதால் இறைவிருப்பத்தின் படியும், ஜமாஅத் சான்றோர்களின் ஆலோசனைகளின் படியும், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து வெளியேறுவது நல்லது என்று தீர்மானிக்கப்பட்டது.

பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவ்வாறு வெளியேறும்போது அவர்கள் தமது சொந்த நலனைப் பற்றிச் சிறிதும் கவலைப்படவில்லை. வெளியேறிச் செல்லும் போது தம்மீது எந்தவிதமான பிடிவாரண்டோ, நீதிமன்றத்தில் நேரில் ஆஜராக வேண்டுமென்ற உத்தரவோ நிலுவையில் இருக்கக் கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையில் தாம் நாட்டை விட்டு வெளியேறினால் ஜமாஅத்திற்கெதிராகவும், கிலாஃபத்திற்கெதிராகவும் அவப்பெயரை ஏற்படுத்தக் கூடிய வீணான அவதூறுகளை எதிரிகள் பரப்பப் கூடும் என்று அவர்கள்

குறிப்பிட்டார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா குற்றச் செயல் புரிந்து விட்டு நாட்டை விட்டுத் தப்பியோடி விட்டார் என்று அவர்கள் வதந்திகளைப் பரப்பக் கூடும். எனவே அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையை உருவாக்கும் வாய்ப்பைத் தர தாம் தயாராகவில்லை என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களது தன்னலமற்ற எண்ணங்களால் பாகிஸ்தானை விட்டு வெளியேறிய அவர்களது பயணம் இறையருள்கள் நிரம்பியதாக அமைந்தது. அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறி விடாமல் தடுப்பதற்காக ஜெனரல் ஸியாவால் ஐந்து கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டன. அவர்கள் பயணம் செய்யத் தீர்மானித்தபின், திடீரென விமானம் வந்து போவதில் ஏற்பட்ட தாமதங்களும், அதைத் தொடர்ந்த விமான நேரமாற்றங்களும், ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தமது குடும்பத்தாருடன், கண்காணிப்புக் குழுவினரின் கண்காணிப்பையும் மீறிப் பாதுக்காப்பாக பாகிஸ்தானைவிட்டு வெளியேறுவதை எளிதாக்கின. அவர்கள் தமது குடும்பத்துடன் ஹாலந்து சென்று பிறகு அங்கிருந்து இலண்டன் சென்றடைந்தார்கள்.

இந்தப் பயணம் முடிந்து பல மாதங்கள் கழிந்த பின்னர்தான் ஒரு விஷயம் தெரியவந்தது. பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளரிடமிருந்து அனைத்து விமான நிலையங்களுக்கும், துறைமுகங்களுக்கும் அனுப்பிய செய்தியில் இறைவன் ஏற்படுத்திய பெயர் மாற்றமே அவர்களின் பாதுக்காப்பான பயணத்திற்கு வழி கோலியது என்பது பின்னாளில் தெரிய வந்தது. அவர் அனுப்பிய இரகசியச் செய்தியில் அஹ்மதிய்யா இயக்கத்தின் தலைவர் மிர்ஸா தாஹிர் அஹ்மது வெளியேறாமல் பார்த்துக் கொள்ளவும் என்பதற்குப் பதிலாக அஹ்மதிய்யா இயக்கத் தலைவர் மிர்ஸா நாஸிர் அஹ்மது வெளியேறாமல் பார்த்துக் கொள்ளவும் என்று குறிப்பிட்ட பெயர் மாறாட்டம்தான் அவர்கள் எளிதாக வெளியேற வகை செய்தது.

அவ்வாறு அவர்கள் காலத்தின் கட்டாயத்தால் வெளியேறி இலண்டனில் குடியேறியதை, ஜமாஅத்திற்கு எத்தனை அருளுக்குரியதாக இறைவன் ஆக்கினான் என்பதை அதன்பின் உள்ள வரலாறு காட்டுகிறது.

அவர்கள் இலண்டன் சென்றடைந்தது ஒருநாள் காலை எட்டு மணியாகும். அவர்கள் இலண்டன் சென்றடைந்ததும் அங்கு லுஹர் தொழுகை எத்தனை மணிக்கு நடைபெறும் என விசாரித்தார்கள். மிகவும் அவசரமாகவும், இரகசியமாகவும் மேற்கொள்ளப்பட்ட எட்டு மணிநேரப் பயணத்திற்குப் பின்னும் சரியான நேரத்தில் லுஹர் தொழுகைக்கு வந்து சேர்ந்தார்கள். கலீஃபா ஆனபின் இலண்டன் நகரில் முதல் ஜமாஅத் தொழுகையை முன்னின்று நடத்தினார்கள். அப்போது அவர்களின் குரல் கம்மிப் போயிருந்ததை அந்தத் தொழுகையில் கலந்து கொண்டவர்களால் உணர முடிந்தது. பாகிஸ்தானில் ஒலிபெருக்கி வைத்து உரையாற்றுவதற்கு அஹ்மதிகளுக்கு உரிமை மறுக்கப்பட்டதன் காரணமாக அவர்கள் அங்கு உரத்த குரலில் உரையாற்ற நேரிட்டதால் அவர்கள் தொண்டை கட்டிப் போயிருந்தது.

தொடர்ந்து இலண்டனில் இருந்த காலத்தில், ஜமாஅத்திற்கு எதிராக ஸியாவுல் ஹக் வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையில் காணப்பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டிற்கும் தமது ஜுமுஆ உரையின் மூலமும், ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரைகள் மூலமும் ஆணித்தரமான பதிலளித்தார்கள்.

**முபாஹலா அழைப்பு:**

பாகிஸ்தானிலிருந்து வெளியேறியதோடு ஸியாவுல் ஹக் அரசோடு உள்ள உறவை நிறுத்திக் கொள்ளவில்லை. அந்நாட்டில் அஹ்மதிகளுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருந்த அடக்கு முறைகளை நிறுத்திக் கொள்ளுமாறு தொடர்ந்து ஸியாவுல் ஹக்குக்கு எச்சரிக்கை விடுத்த வண்ணம் இருந்து வந்தார்கள். ஆனால் அந்த எச்சரிக்கைகள் எதுவும் பாகிஸ்தான் ஆட்சியாளர்களால் கண்டு கொள்ளப்படாமல் போகவே, இறுதியாக 1988ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3ஆம் நாள் நிகழ்த்தப்பட்ட உரையில், திருக்குர்ஆனின் 3:62வது வசனத்தை மேற்கோள்காட்டி பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறையைப் பின்பற்றி ஜெனரல் ஸியாவுல் ஹக்கிற்கு எதிராக முபாஹலா அழைப்பு

விடுத்தார்கள். இந்த முபாஹலா சவால் என்பது இதில் தொடர்புடைய ஒருவர், மற்றவரின் ஆயுட்காலத்திலேயே மரணிப்பதன் மூலமே முடிவுக்கு வரும்.

இந்த அழைப்பை விடும்பொழுது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் பின்வருமாறு துஆச் செய்தார்கள்: ''இறைவா! உனது பார்வையில் எங்கள் இருவரில் யார் பொய்யரும், இட்டுக் கட்டுபவருமாக இருக்கிறாரோ, அவர் மீது இன்னும் ஓர் ஆண்டிற்குள் உனது கோபம் இறங்கட்டுமாக! அவர் மீது அப்படிப்பட்ட ஒரு அவமானத்தையும், வேதனையையும், தண்டனையையும் இறக்கு வாயாக! அதன் மூலம் மக்கள் அனைவரும் இந்த அவமானத்தையும், அழிவையும் காண்கின்ற வாய்ப்பைப் பெறுவார்களாக!''

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் முபாஹலா அறிக்கையைக் கொண்ட ஜுமுஆ உரையின் பிரதிகள் பெருமளவில் அச்சிடப்பட்டு உலகின் பல நாடுகளுக்கும் அனுப்பப்பட்டதால் அந்த முபாஹலா அறிக்கை உலகம் முழுவதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஆதனால் பாகிஸ்தானில் அஹ்மதிகளுக்கு எதிராக இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள் சற்றும் குறையவில்லை. ஜெனரல் ஸியாவோ அந்த எச்சரிக்கையை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. இந்த எச்சரிக்கை விடப்பட்ட சில காலத்திலேயே அதன் விளைவுகள் வெளிப்படத் தொடங்கின. அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கெதிரான வன்முறைகளைத் தூண்டி விடுவதில் முன்னணியில் நின்ற ஆஷித் ஹுஸைன் என்பவர் தமது கடையிலேயே மின்சாரம் தாக்கி இறந்தார். இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த மற்றொரு எதிரி ஒரு கார் விபத்தில் உயிரிழந்தார். ஜெனரல் ஸியாவுக்கும் இதுபோன்ற ஒரு கோர முடிவு காத்திருந்தது. 1988ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ஆம் நாள் நடைபெற்ற ஒரு விமான விபத்தில் சிக்கித் தூள் தூளானார். ஜெனரல் ஜியாவின் உடலில் மிஞ்சியதாகக் கண்டெடுக்கப்பட்டது அவரது செயற்கைப் பல் மட்டுமே. இவ்வாறு முபாஹலா அழைப்பின்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் துஆவை சொல்லுக்குச் சொல் நிறைவேற்றி இறைவனின் கோபத்திற்கு ஆளானோர் யார் என்பதை உலகிற்கு வெளிப்படுத்தினான். ஆனால் உலகமோ இன்றுவரை அதனைக் கண்டு கொண்டதாகத் தெரியவில்லை. ஜெனரல் ஸியாவின் கொடுங்கோலாட்சியும் அழிந்தது. அது ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களுக்கு இறங்கிய இறையறிவிப்பாகிய பஅத் கியாரா, இன்ஷா அல்லாஹ்'' (இறைவன் நாடினால், பதினொன்றுக்குப் பின்) என்ற முன்னவிறிப் பையும் நிறைவேற்றியது. ஆம்! இந்த முன்னறிவிப்பின்படி ஜெனரல் ஸியாவின் கொடுங்கோல் ஆட்சி 11 ஆண்டுகளுக்குப்பின் ஒரு முடிவுக்கு வந்தது.

**உலகச் சுற்றுப் பயணம்**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) பாகிஸ்தானிலிருந்து இலண்டனில் குடியேறியதை இறைவன் ஜமாஅத்திற்கு மிகவும் அருளுக்குரியதாத ஆக்கினான். ஆண்டில் குறைந்தது மூன்று மாதங்கள் தாமே ஜமாஅத்தின் பிரச்சாரப் பணிகளில் ஈடுபட்டார்கள். அந்த முயற்சிகளின் பலனாக அடுத்த ஆறு ஆண்டுகளில் 3,00,000 பேர் தம்மை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் இணைத்துக் கொண்டனர். அவர்களின் தூய வழிகாட்டுதல்களால் ஜமாஅத் உலகின் பல நாடுகளில் அதுவரை காணாத வளர்ச்சியைக் கண்டது. ஜமாஅத்தின் சார்பில் மருத்துவமனைகள் கட்டப்பட்டன. மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவக் கருவிகள் வழங்கப்பட்டன. உலகின் பல்வேறு நாடுகளுக்குத் தேவையான மருத்துவ நிபுணர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். இவையனைத்திற்கும் தேவையான நிதி ஆதாரங்களை ஜமாஅத்தின் நிதியிலிருந்தே ஏற்படுத்தினார்கள். திறமையான இளைஞர்களுக்கு உயர்கல்வி பயிலக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது. உலகின் பல நாடுகளில் உள்ள ஜமாஅத்துகளின் சார்பாக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களுக்கு வரவேற்பளிக் கப்பட்டது. நைஜீரியா, கானா, லைபீரியா, சிராலியோன், மொரீஷியஸ், ஃபிஜி, ஜெர்மனி,

ஃபிரான்ஸ், இத்தாலி, ஹாலந்து, கனடா, தென்அமெரிக்கா போன்ற நாடுகள் அவ்வாறு அவர்கள் பயணம் மேற்கொண்ட நாடுகளில் அடங்கும்.

அவர்கள் கலீஃபாவாக ஆன பின்பும் எளிமையான வாழ்க்கையை மேற்கொள்வதில் அதிகக் கவனம் செலுத்தினார்கள். விமானத்தில் பயணம் செய்யும் பொழுது உயர்வகுப்புகளைத் தவிர்த்து சாதாரண வகுப்பில் பயணம் செய்வதையே விரும்பினார்கள். இலண்டனில் தமக்கென ஏற்பாடு செய்யப்பட்ட வசதிமிக்க வீட்டை விடுத்து எளிய வீட்டைத் தேர்ந்தெடுத்தார்கள். தேவையற்ற வசதிகளுக்காக பணம் செலவு செய்வதை அறவே தவிர்த்தார்கள்.

**நூற்றறண்டு விழாக் கொண்டாட்டம்.**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இலண்டனில் கழித்த தமது கிலாஃபத் காலத்தில் பல குறிப்பிடத்தக்க சாதனைகளை நிகழ்த்தினார்கள். அவற்றுள் குறிப்பிடத்தக்கது உலகிலுள்ள நூறு மொழிகளில் திருக்குர்ஆனின் தேர்ந்தெடுக்கப் பட்ட வசனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நபிமொழிகள், ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் பொன் மொழிகள் ஆகியவற்றை வெளியிட்டதாகும். இது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்பட்ட சாதனையாகும்.

நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சிகளில் மற்றொரு குறிப்பிடத்தக்க நிகழ்வு இலண்டனில் உள்ள இஸ்லாமாபாதில், 1989ஆம் ஆண்டு நடைபெற்ற நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் பல உள்ளூர் தலைவர்களும், வெளிநாட்டுப் பிரமுகர்களும் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள்.

**பன்னூல் அறிஞர்**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் சிறப்புகளுள் ஒன்று அவர்கள் பன்னூல் அறிஞராக விளங்கியதாகும். அவர்கள் உலகியல் அறிவில் சிறந்து விளங்கியதோடு, திருக்குர்ஆனின் ஞானத்திலும் தலைசிறந்து விளங்கினார்கள். எனவே, அவர்களின் கிலாஃபத் காலத்தில் ஜமாஅத்தின் சார்பில் பல அரிய நூல்கள் வெளியிடப்பட்டன. அவற்றுள் பல, சொற்பொழிவுகளாக நிகழ்த்தப்பட்டுப் பிறகு நூல்வடிவில் வெளியிடப்பட்டன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை:

1. Christianity - A JOURNEY FROM FACTS TO FICTION கிறித்தவமார்க்கம் - சம்பவங்களிலிருந்து (உண்மைச் சம்பவங்களிலிருந்து கற்பனைகளை நோக்கிய ஒரு பயணம்.)
2. An Elementary study of Islam (இஸ்லாத்தின் ஆரம்ப பாடம்)
3. Islam's Response to Contempary Issues (இக்காலப் பிரச்சனைகளுக்கு இஸ்லாம் கூறும் தீர்வு.
4. Gulf Crisis and the New World Order (வளைகுடாப் பிரச்சனையும், புது உலகத் திட்டமும்)
5. Revelation, Rationality, Knowledge and Truth (இறைவெளிப்பாடு, பகுத்தறிவு, அறிவு, உண்மை)
6. கலாமே தாஹிர் என்னும் கவிதைத் தொகுப்பு நூல்

அவர்களுடைய இறுதிக் காலத்தில் தமது உருதுக் கவிதைகளை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்து வெளியிட ஏற்பாடு செய்தார்கள்.

**ஜமாஅத் உறுப்பினர்கள் அறிவாற்றலை வளர்க்கும் அரிய ஏற்பாடுகள்**

தாம் சுயமாக அறிவாற்றலில் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல் ஜமாஅத் உறுப்பினர்களின் அறிவாற்றலை வளர்ப்ப தற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்தார்கள். ஜமாஅத் உறுப்பினர்களுக்கான ஆய்வுக் குழுக்களை அமைத்து அவர்களின் மார்க்க அறிவை வளர்ப்பதற்கு சிறப்பாக வழி காட்டினார்கள்.

வாரம் ஒருமுறை நடைபெற்ற ''மஜ்லிஸே இர்ஃபான்' என்னும் மார்க்க கேள்வி பதில் கூட்டத்தில் கலந்து கொண்டு மார்க்க ரீதியான நுணுக்கமான கேள்விகளுக்கு அறிவுப் பூர்வமான விளக்கங்களைத் தந்து ஜமாஅத் உறுப்பினர்கள் தங்கள் மார்க்க அறிவிலும், செயல்பாடுகளிலும்

மேலும் மேலும் முன்னேற அரிய வழிகாட்டினார்கள்.

**முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா MTA**

1994ஆம் ஆண்டு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட 'முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா' என்னும் இஸ்லாமிய டெலிவிஷன் சேனல் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைந்தது. அது உலகம் முழுவதும் வாழ்ந்த அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உறுப்பினர்களை அன்றாடத் தொடர்புள்ளவர்களாக ஒன்றிணைத்தது.

இஸ்லாத்தின் ஒப்பற்றக் கருத்துக்களையும், இஸ்லாமிய நடைமுறைகளையும் உலக மக்களை அவர்கள் இல்லம் தேடிச் சென்று வழங்கியது. இந்தத் தொலைக்காட்சி சேனல் மூலம் உண்மை இஸ்லாமாகிய அஹ்மதிய்யத்தின் கொள்கைகளை உலகின் மூலைமுடுக்கெல்லாம் எடுத்துச்சென்றது.

1994 ஆண்டு மூன்று மணிநேர ஒளிபரப்போடு துவங்கிய முஸ்லிம் டெலிவிஷன் அஹ்மதிய்யா (MTA) 1996ஆம் ஆண்டு 24 மணிநேர ஒளிபரப்புச் சேனலாக வளர்ந்தது. தற்போது இங்கிலாந்திலுள்ள பார்வையாளர்களுக்காக இரண்டாவது சேனலும், அமெரிக்கப் பார்வையாளர்களுக்காக மூன்றாவது சேனலும் துவக்கப்பட்டுள்ளன.

**ஹோமியோபதி மருத்துவத்தில் நிபுணத்துவம் :**

ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஹோமியோபதி மருத்துவத்திலும் சிறந்து விளங்கினார்கள். ஒரு மனிதனின் முகக்குறிப்பை வைத்தே அவரது நோயையும், அதற்கான மருத்துவத்தையும் கூறும் அளவுக்கு அம்மருத்துவத்தில் சிறந்து விளங்கினார்கள்.

ஜமாஅத்தின் ஆரம்பகாலப் பெரியவர்களுள் ஒருவரான சர் முஹம்மது ஸஃபருல்லாஹ் கான் ஸாஹிப் 40 ஆண்டுகாலம் நீரிழிவு நோயோடு வாழ்ந்து வந்தார்கள். எனவே இந்நோய்க்கு மருந்தே இல்லை என்றே எண்ணினார்கள். ஆனால் அவர்களுக்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அளித்த ஹோமியோபதி மருந்தால் சிறந்த பலன் கிட்டியது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் ஹோமியோபதி மருத்துவத்தைப் பற்றி MTA தொலைக்காட்சியில் தொடர் சொற்பொழிவாற்றினார்கள். அதன்மூலம் அம்மருத்துவத்தின் சிறப்பினை அறிந்து கொண்டு ஏராளமான மக்கள் பலன் பெற்றனர். அவர்களின் சீரிய வழிகாட்டுதலின் பேரில் உலகெங்கும் 300க்கும் மேற்பட்ட ஹோமியோபதி மருத்துவமனைகள் இயங்கி வருகின்றன.

**HUMANITY FIRST (மனிதம் முதலில்) என்ற அமைப்பு**

உலகில் போரினாலும், வறட்சி, பஞ்சம் பூமியதிர்ச்சி போன்ற பேரழிவுகளாலும் பசியால் வாடும் மக்களின் துயரத்தைக் கண்டு துயருற்றார்கள். அவர்களின் துயர் துடைக்க ஓர் ஏற்பாடு செய்யவேண்டும் எனக்கருதினார்கள். எனவே, இந்த நோக்கத்திற்காக HUMANITY FIRST (மனிதம் முதலில்) என்ற அமைப்பைத் துவக்க அனுமதி வழங்கினார்கள். இந்த அமைப்பு உலகின் பல பகுதிகளில் அல்லலுறும் மக்களின் துயர்துடைக்கும் பணியை ஆற்றிவருகிறது. இந்த அமைப்பு ஹங்கேரி, போஸ்னியா, கொஸோவோ, சிராயிலியோன் போன்ற நாடுகளில் மக்களின் துயர் துடைப்பு பணியில் அரும்பணி ஆற்றியது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் ஆயுட்காலத்திலேயே பதினைந்து நாடுகளில் நிவாரப்பணிகளை மேற்கொள்ளும் வாய்ப்பு பெற்றது.

**தாயி இலல்லாஹ் திட்டம்**

இத்திட்டம் 1983ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 28ஆம் நாள் அறிவிக்கப்பட்டது. ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட நீண்ட காலத் திட்டங்களுள் இதுவும் ஒன்றாகும்.

இறைவன் பக்கம் மக்களை அழைப்பவர்தாம் இறைவனது பார்வையில் மிக அழகானவரும், அன்பிற்குரியவரும் ஆவார் என்று ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் இத்திட்டம் தொடர்பாக உரையாற்றும் பொழுது

குறிப்பிட்டார்கள்.

**பஞ்ச நிவாரணம்**

இத்திட்டம் 1984ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 9ம் நாள் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ஆப்பிரிக்காவில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதியில் வாழும் மக்களின் துயரங்களைப் போக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டத் துவக்கத்தின் பொழுது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் அபீஸீனியாவில் ஏற்பட்ட பஞ்சத்தையும் அங்கு ஜமாஅத் மேற்கொண்ட நடவடிக்கைகளையும் முன் னுதாரணமாகக் காட்டினார்கள். அபீஸீனி யாவில் பஞ்சம் பாதித்த பகுதிகளில் ஜமா அத்தின் முயற்சியால் 1000 ஏக்கர் நிலத்தில் தொடர்ந்து பயிர்செய்து அறுவடையைப் பெறும் ஏற்பாட்டை உருவாக்கியதை எடுத்துக்காட்டாகக் கூறினார்கள்.

**ஹஸ்ரத் பிலால் தியாகிகள் நிதி**

இந்தத் திட்டம் 1986ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் நாள் துவக்கப்பட்டது. இறைவழியில் தம் இன்னுயிரை இழந்த தியாகிகள், ஜமாஅத்தின் கொள்கைகளில் உறுதியாக நின்ற காரணத்திற்காகச் சிறையில் வாடும் தோழர்களின் குடும்பத்தார், வாரிசுகளின் நலவாழ்வுக்கென ஏற்படுத்தப்பட்டது இத்திட்டம். அடக்குமுறைக்கு ஆளான அஹ்மதிகளுக்காக ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் மிகவும் வருந்தி அவர்கள் துயரம் நீங்குவதற்காக பல நேரங்களில் முழு இரவையும் இறைவணக்கத்தில் கழித்தார்கள். ஜமாஅத்திற்காக உயிர் துறந்தவர்களின் குடும்பத்தினரையும், வாரிசுகளையும் கவனிப்பத்தில் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்தினார்கள். ஜமாஅத்தின் அரவணைப்பைப் பெறுவது அவர்களின் உரிமை என்று குறிப்பிட்டார்கள்.

**வக்ஃபே நவ் திட்டம்:**

இத்திட்டம் 1987ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 3ஆம் நாள் ஹஸ்ரத் நான்வாது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களால் தொலை நோக்குப் பார்வையோடு துவக்கி வைக்கப்பட்ட மிகச்சிறந்த திட்டமாகும். அடுத்த நூற்றாண்டில் இந்தத் தலைமுறையையும் இனி வரவிருக்கும் தலைமுறையையும் இறைவனின் உண்மையான நல்லடியார்களாக ஆக்கும் பொறுப்பு ஜமாஅத்திற்கு இருக்கின்றது என்று இத்திட்டத் துவக்கத்தின் போது ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் குறிப்பிட்டார்கள். தங்கள் குழந்தைகளை இறைவழியில் அர்ப்பணம் செய்வதன் மூலம் ஜமாஅத் மனித இனத்திற்கு மிக உன்னதமான அன்பளிப்பை வழங்க முடியும் என்றும் குறிப்பிட்டார்கள்.

**மர்யம் திருமண உதவித் திட்டம்**

இத்திட்டம் 2003ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அருளுக்குரிய கிலாஃபத் காலத்தில் அறிவிக்கப்பட்ட கடைசித் திட்டமாகும். தாம் ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும் உதவுகின்ற பண்பை தனது சொந்த முன்னுதாரணத்தின் மூலம் பிறருக்கு எடுத்துக் காட்டிய தமது அருள்மிகு தாயாரின் பெயரில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் திருமண வயதை அடைந்தும், பொருளாதார வசதியின்மை காரணமாக திருமணம் செய்வதில் சிரமப்படும் பெண்களுக்குத் திருமணத்திற்கான நிதி உதவி செய்யப்பட்டது.

**பிற திட்டங்கள்**

இதுவரை கூறப்பட்ட திட்டங்களல்லாமல் இன்னும் பல சமுதாய நலத்திட்டங்களும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்களின் அருளுக்குரிய கிலாஃபத் காலத்தில் நிறைவேற்றப்பட்டன. நூல்கள் வெளியீடு, தீவுகள், கிராமங்கள், நாட்டின் தலைநகரங்கள் ஆகியவற்றில் பிரச்சாரப் பணிகள் மேற்கொள்ளுதல், உலகில் உள்ள அனைத்து நாடுகளிலும் உள்ள மக்களின் பத்து சதவிகிதம் பேருக்காவது அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியை எட்ட வைத்தல், இஸ்லாத்தில் பெண்களின் நிலை பற்றி எதிரிகள் எழுப்பும் ஆட்சேபணைகளைப்

தொடர்ச்சி 23ஆம் பக்கம்...

# ஒன்றுமைக்கு வழி

**அமீனுல்லாஹ், மதுரை**

வஃதஸிமூ பிஹப்லில்லாஹி ஜமீஅவ் வலா தஃபர்ரகூ.

பொருள் : அல்லாஹ்வின் கயிற்றை ஒன்றாகப் பற்றிப் படியுங்கள்; பிரிந்து போய் விடாதீர்கள். (திருக்குர்ஆன் 3:104)

நமக்கு ஒரே இறைவன் அல்லாஹ். ஒரே வேதம், திருக்குர்ஆன். அதைக் கொண்டு வந்த ஒரே தூதர், ஹஸ்ரத் முஹம்மது நபி (ஸல்) அவர்கள் தான். அப்படியானால் நாம் ஒற்றுமையாகத்தானே இருக்க வேண்டும்! ஏன் அப்படி ஒற்றுமையாக இல்லை? ஒற்றுமையை நோக்கி செயல்பட நாம் என்ன செய்ய வேண்டும்? என்பதே இந்தத் தலைப்பு.

கடந்த 1425 ஆண்டுகளாக இஸ்லாம் அரபு நாட்டில் தோன்றியதிலிருந்தே, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலிருந்தே இன்றுவரை ஒற்றுமையே இல்லையா? அதை இனிமேல் தான் உருவாக்க வேண்டுமா? ஒற்றுமையை அல்லாஹ்வே உருவாக்கி வைத்துள்ளானா? அல்லது நாம் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று பொறுப்பை நம்மிடம் தந்துள்ளானா? என்பதை புரிய வேண்டும்.

அது பற்றி திருக்குர்ஆனில் தெளிவுபடுத்து கிறான். பிஸ்மில்லாஹிர் ரஹ்மானின் ரஹீம் என்பதும் திருக்குர்ஆனின் ஒரு வசனம்தான். அதுதான் முதல் வசனம் என கணக்கிட்டு எண்ணினால் 24:56ல் உள்ளது. பிஸ்மில்லாஹ் என்பதை வசன எண்ணிக்கை கணக்கில் நீங்கள் சேர்க்கவில்லையென்றால் 24:55 வது வசனத்தைப் பாருங்கள்.

பிஸ்மில்லாஹ் என்று அல்லாஹ்வின் திருப்பெயரால் என்று தொடங்கும்போதே ஒன்றுபடாத மக்கள் நிலையைப் பாருங்கள்! பிஸ்மில்லாஹ் என்பதும் வஹிதான், வசனம் தான் என்றால் அதை எண்ணிக்கைக் கணக்கில் சேர்த்துக் கொள்ள வேண்டியது தானே அறிவுடைமை! அப்படிச் சேர்த்தால் திருக்குர் ஆன் 24:56ல் அல்லாஹ் கூறுகிறான்.

‘‘அல்லாஹ் உங்களுள் நம்பிக்கை கொண்டு நற்செயல் புரிபவர்களை அவர்களின் முன்னோர்களை கலீஃபா (தலைவராக) ஆக்கியது போன்று, இப்பூமியில் கலீஃபா (தலைவராக) ஆக்குதாகவும், அவன் அவர்களுக்காக விரும்பிய அவர்களின் மார்க்கத்தை அவர்களுக்கு உறுதிப்படுத்துவதாகவும், அவன் அவர்களுக்கு அவர்களது அச்சத்திற்குப் பிறகு அதற்குப் பதிலாக அமைதியினை வழங்குவதாகவும் அவர்களிடம் வாக்குறுதியளித்துள்ளான். அவர்கள் என்னையே வணங்குவார்கள். எதனையும் எனக்கு இணையாக்க மாட்டார்கள். இதன், பின்னரும் நிராகரிப்பவர்கள் எல்லை மீறியவர்கள் ஆவார்கள்’’.

இந்த வசனத்தின்படி கலீஃபாவைக் கொடுத்து அல்லாஹ்வே ஒற்றுமையை உருவாக்கித் தருகிறான். ஒன்றுமையை விரும்பாதவர்கள் மொழியாக்கத்தில் கலீஃபா என்ற வார்த்தையை மறைக்கும் விதமாக பொருள் கொடுத்து மக்களை பிளவுப் படுத்துகிறார்கள். திருக்குர்ஆனில் கலீஃபா என்ற அரபி வார்த்தையே உள்ளது. அப்படி அல்லாஹ்வே கலீஃபாவை நமக்குத் தந்து ஒற்றுமையை உருவாக்கித் தருகிறான், தந்திருக்கிறான். அதை அடையாளம் கண்டு ஒன்றுமையை நோக்கி பயணிக்க வேண்டுமே ஒழிய நாமாகவே கலீஃபாவை உருவாக்கிக் கொள்ளவும் முடியாது. அப்படி வேறு தலைவர்களால் ஒற்றுமையை உருவாக்கவும் முடியாது. அல்லாஹ் அப்படி விடமாட்டான்.

ஆக, கலீஃபாவை நமக்கு அல்லாஹ் தர வேண்டுமென்றால், நம்பிக்கையும், நற்செயலும் உள்ள கூட்டம் இருக்க வேண்டும். நாங்கள், சரியான ஈமானும், சரியான நற்செயலும் உடையவர்கள் தாம் என இன்றைய முஸ்லிம்கள் வாதித்தால் இறைவனால் நியமிக்கப்பட்ட கலீஃபாவைக் காட்ட வேண்டும். அத்தகைய கலீஃபா அவர்களிடம் இல்லையென்றால் அவர்களது ஈமானில் குறை உள்ளது என்பதையும், நற்செயலில் கலப்படம், களங்கம் உள்ளது என்பதையும் உணர வேண்டும். கலீஃபாவைக் கொண்டிருக்கும் ஜமா அத்தினர் தாம் ஒற்றுமை

உடையவர்களாக இருப்பார்கள். இது அல்லாஹ் ஏற்படுத்தும் நடைமுறை, சுன்னத்தாக இருக்கிறது.

மேலும் 24:56 வசனத்தின்படி கலீஃபாவைக் கொண்டுள்ள ஜமாஅத்தினர் மட்டும்தான் அல்லாஹ்வை மட்டும் வணங்கக் கூடியவர்கள், அதாவது உண்மையான தவ்ஹீது கொள்கையை உடையவர்கள் என்பதாகும். அவர்கள் அல்லாஹ்வுக்கு எதனையும் இணை வைக்க மாட்டார்கள் என்றும் அந்த வசனம் கூறுகிறது.

யாரிடம் கலீஃபா இருக்குமோ அவர்கள் மட்டும்தான் எந்த இணைவைப்பும் ஷிர்க்கும் வைக்காதவர்கள். எங்களிடம் எந்த ஷிர்க்கும் இல்லை என்று யாராவது சொன்னால் அவர்களிடம் கலீஃபா இருந்தே ஆகவேண்டும். கலீஃபா யாரிடம் இல்லையோ அவர்களிடம் அவர்களுக்கு தெரிந்தோ, தெரியாமலோ ஷிர்க்கும் கலந்து கொள்கிறது என்பதை அல்லாஹ்வின் மேற்கண்ட வசனம் அடையாளம் காட்டுகிறது.

ஆக, ஒற்றுமையை நோக்கி பயணிக்க அல்லாஹ் உருவாக்கிய கலீஃபா உள்ள ஜமாஅத்தை அடையாளம் கண்டு அதில் இணைய வேண்டும். மற்ற குட்டி தலைவர்கள் உருவாக்குவது ஜமாஅத் அல்ல; அது பிளவுப் படும் பிரிவு ஆகும்; அது சிதறுண்டு போய்க் கொண்டே இருக்கும்.

ஆக இந்த வசனத்தின்படி ஏற்கனவே கிலாஃபத்தின் மூலமாக ஒற்றுமையை அல்லாஹ் உருவாக்கி வைத்திருக்கிறான். இப்போதும் ஒற்றுமை இருந்து கொண்டே தான் இருக்கிறது. இனிமேல் ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை. அப்படி இனிமேலும் வேறு ஒரு ஒற்றுமை ஏற்படுத்த முனைந்தால் அது ஒருபோதும் நடக்காது.

அல்லாஹ்வின் கயிற்றைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறிய பிறகு, பிரிந்து போய் விடாதீர்கள் என்று அறிவுறுத்துகிறான்.

பொய்வாதிகள் சிதறுண்டு போவார்கள் என்பதை அல்லாஹ் சூசகமாக குறிப்பிட்டு விட்டான். யார் ஒற்றுமையின்றி சிதறுண்டு, பிளவுபட்டு இருக்கின்றார்களோ அவர்கள் பொய்வாதிகள் என்று திருக்குர்ஆன் அடையாளம் காட்டுகிறது.

ஆக, இறைவனால் உருவாக்கப்பட்ட அஹ்மதிய்யா கிலாஃபத்தின் மூலம் ஒற்றுமை இருந்து கொண்டுதானிருக்கிறது. அதை நாம் அடையாளம் காண வேண்டும். அப்படி இருந்து கொண்டி இருக்கும் அந்த ஒற்றுமையை நோக்கி செல்ல வேண்டும்.

திருக்குர்ஆனின் 24:56 வசனத்திற்கு ஆதரவாக ஒரு ஹதீஸ் உள்ளது. ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் அறிவிப்பதாவது:

''அல்லாஹ் நாடும் வரை இந்த நுபுவ்வத் இருக்கும், பின்னர் அதனை அல்லாஹ் எடுத் கொள்வான். பின்னர் அல்லாஹ் நாடும் வரை கிலாஃபத் இருக்கும், பின்னர் அல்லாஹ் அதனை எடுத்துக் கொள்வான். பின்னர் அல்லாஹ் நாடும் வரை மன்னர் ஆட்சி நடைபெறும். பின்னர் அல்லாஹ் அதனையும் எடுத்துக் கொள்வான். பின்னர் அல்லாஹ் நாடும்வரை கொடுங்கோலாட்சி நடைபெறும், பின்னர் அல்லாஹ் அதனையும் எடுத்துக் கொள்வான். பின்னர் மீண்டும் ''நுபுவ்வத் வழியில் கிலாஃபத்'' மலரும் என்று கூறிய பின்னர் நபி (ஸல்) அவர்கள் மவுனமாகி விட்டார்கள்''. (முஸ்னது அஹ்மது தொகுதி 5 பக்கம் 404)

இந்த ஹதீஸின் படி முன்னர் எதுவரை ஒற்றுமை இருந்தது என்பதையும் எந்த நிலையில் இருந்ததோ அப்படியே பின்னால், மீண்டும் அதே வழியில் தான் அதாவது நுபுவ்வத் வழியிலான கிலாஃபத் மூலமாகத்தான் ஒற்றுமை நிகழும் என்பதையும் முன்னறிவிப்பு செய்கிறார்கள்.

உலகிற்கு ஒரே தலைமையாய் நபியும் அவருக்குக் கட்டுப்பட்ட ஒரே ஜமாஅத்தாக மக்களுமாக முதலில் ஒற்றுமை இருந்தது. அடுத்து நுபுவ்வத்திற்கு பின்னர் கிலாஃபத் உலகம் முழுவதற்கும் ஒரே தலைமையாய் இருந்தது. அதற்குக் கட்டுப்பட்ட ஜமாஅத்தாக மக்கள் ஒற்றுமையாய் இருந்தனர். அதன் பின்னர் ஏற்பட்ட வெவ்வேறு நிலைமைகளில் தான் முஸ்லிம்களிடம் பல்வேறு பிரிவுகள், பிளவுகள் ஏற்பட்டன. ஒற்றுமை இல்லாது போனது. மீண்டும்

ஒற்றுமை ஏற்பட வேண்டுமென்றால் முன்னர் கூறிய நுபுவ்வத் வழியில் கிலாஃபத் மலர்வதன் மூலமே ஒற்றுமையை அல்லாஹ் ஏற்பட செய்வான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ் முன்னறிவிப்பு செய்கிறது. அதன்படி நுபுவ்வத்தும் கிலாஃபத்தும் உள்ள ஜமாஅத்தில் ஒற்றுமை இருந்து கொண்டு இருக்கும். அதல்லாத மற்ற பிரிவுகளில் ஒற்றுமை இருக்காது; ஒற்றுமை உருவாகாது. அதை மனிதனால் சுயமாக உருவாக்கவும் முடியாது என்பதை திரு வசனத்திலிருந்தும், நபிமொழியிலிருந்தும் விளங்கிக் கொள்கிறோம்.

திருக்குர்ஆன் வசனம் 24:56க்கு இணக்கமான இன்னொரு ஹதீஸ் ஹுதைபத்துல் யமான் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இது புகாரி, முஸ்லிம், திர்மிதி, இப்னுமாஜா போன்ற நூல்களில் இடம் பெற்றள்ளது.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் மக்கள் (எப்போதும்) நல்லதைப் பற்றியே கேட்பவர்களாக இருந்தனர். நானோ கெட்டது என்னை மிகைத்து விடாமல் இருக்க, கெட்டது பற்றியே கேட்கக் கூடியவனாக இருந்தேன். ஒருமுறை...

நான் : அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நாங்கள் அறியாமையிலும் தீமையிலும் இருந்தபோது, அல்லாஹ் எங்களுக்கு (ஒற்றுமை என்ற) இந்த நல்லதை அருளினான். இந்த நல்லதற்குப் பின்னர் கெட்டது உண்டா?

ஹஸ்ரத் நபி (ஸல்) : ஆம்! உண்டு!!

நான் : கெட்டதற்குப் பின்னர் மீண்டும் நல்லது உண்டா?

ஹஸ்ரத் நபி (ஸல்) : ஆம்! உண்டு!! ஆனால் அது ‘‘தகனுன்’’ (களங்கப்பட்டது)

நான் : அந்த தகனுன் (களங்கம்) என்ன?

ஹஸ்ரத் நபி (ஸல்) : ஒரு கூட்டம் எனது நேர்வழி அல்லாததைக் கொண்டு மக்களை வழி நடத்துவார்கள். நீங்கள் அவர்களை (செயல்களால்) கண்டறிந்து நிராகரித்து விடுவீர்கள்.

நான் : அந்த நல்லதற்கு பின்னர் கெட்டது உண்டா?

ஹஸ்ரத் நபி (ஸல்) : ஆம்! உண்டு!! (சிலரால்) நரகத்தின் வாயிலுக்கு அழைப்பு விடுவிக்கப்படும்; எவர்கள் அந்த அழைப்பை ஏற்கிறார்களோ அவர்கள் அதில் (நரகில்) எறியப்படுவார்கள்.

நான் : யா ரஸூலல்லாஹ்! அவர்களைப் பற்றி விளக்குவீர்களாக.

ஹஸ்ரத் நபி (ஸல்) : அவர்கள் நம்மைச் சார்ந்தவர்களாகவும், நாம் பேசுவதை பேசுபவர்களாகவும் இருப்பார்கள்.

நான் : (அவர்களது வலையில் விழாமல் இருக்க) அப்போது எனக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள்?

ஹஸ்ரத் நபி (ஸல்) : (அப்போது) நீர் முஸ்லிம்களின் ஜமாஅத்தையும் அதன் இமாமையும் பற்றிக் கொள்வீராக.

நான் : அந்த ஜமாஅத்தோ அதன் இமாமோ இல்லை என்றால் (இருப்பதை அறியாமல் இருந்தால்)

ஹஸ்ரத் நபி (ஸல்) : எல்லாப் பிரிவுகளை விட்டும் ஒதுங்கி வாழவும். அப்படியே உமது மரணம் வரை மரவேர்களைச் சாப்பிட்டுக் காலத்தைப் போக்கும் நிலை ஏற்பட்டாலும் சரியே!

இந்த ஹதீஸின் ஒற்றுமையை நோக்கி செல்ல வேண்டுமெனில் முஸ்லிம்களின் ஜமாஅத் மற்றும் அதன் இமாம் இருப்பதை அறிய வேண்டும். ஜமாஅத்துல் முஸ்லிமீன் என்ற பெயரில் இயங்குவதைப் பற்றி இங்கு கூறவில்லை. ஜமாஅத்துடன் அதன் இமாமையும் இணைத்து ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். முஸ்லிம்களின் ஜமாஅத் என்றாலே அதற்கொரு இமாம் இருந்தாக வேண்டும் என்பதை இந்த நபிமொழி மிக நன்றாகவே அறிவுறுத்தி விட்டது. ஜமாஅத், இமாம் இல்லையெனில் வேறெந்த ஒற்றுமையையும் சுயமாக ஏற்படுத்தக் கூடாது. மரத்தின் வேரைத் தின்று தனிமையில் வாழ வேண்டும்.

ஆனால் அப்படி ஏற்படவும் செய்யாது. முழு உலகத்திற்கும் இமாமாக ஒரே தலைவர் இருப்பார். அவருக்கும் கட்டுப்பட்ட முழு உலகமும் ஒன்றுப்பட்ட ஒரு ஜமாஅத் இருக்கும். இதுதான் ஒற்றுமையை நோக்கிச் செல்ல ஹஸ்ரத் ரஹூல்

(ஸல்) அவர்கள் கூறிய வழிகாட்டல். இந்த வழிகாட்டலை மறுப்பவர் ரஸூலையே மறுத்தவராவார். ரஸூலை மறுத்தவர் அல்லாஹ்வையே மறுத்தவராவார். பிரிவுகளாக பிரிந்து சிதறி அழிந்து போகும் அசத்தியத்தை நாம் ஒற்றுமைப்படுத்த வேண்டிய அவசியமில்லை. அது ஒற்றுமைப்படவும் செய்யாது. ஒற்றுமை படுத்தவும் முடியாது. அசத்தியம் அழிந்தே தீரும். சத்தியம் ஒற்றுமையுடன் நிலைத்து நிற்கும். எப்போதும் நிலைத்து நின்று கொண்டு தானிருக்கிறது.

இந்த ஹதீஸின் அடிப்படையில் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் நுபுவ்வத் காலகட்டத்தில் ஒரே தலைமையில் முழு உலக முஸ்லிம்களும் கட்டுப்பட்ட ஒரே ஜமாஅத்தாக இருந்தனர். அதன் பின்னர் கிலாஃபத் ஏற்பட்டது. ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் கலீஃபாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். முழு உலகத் தலைவராக இமாமாக இருந்தார்கள். முஸ்லிம்கள் ஒன்றுபட்டு முழு உலக ஒரே ஜமாஅத்தாக இருந்தனர். அதன் பின்னர் உமர் (ரலி) அவர்கள் காலத்திலும், உஸ்மான் (ரலி) அவர்கள் காலத்திலும் அலி (ரலி) அவர்கள் காலத்திலும் ஒரே தலைமை, ஒரே ஜமாஅத் இருந்தது. எப்போது ஒரு தலைமை என்ற நிலை இல்லாமல் போனதோ, எப்போது ஒரே ஜமாஅத் என்ற நிலை இல்லாது பிளவுகள் உண்டானதோ அத்தோடு ஒற்றுமை இல்லாமல் போனது. மீண்டும் அதே நுபுவ்வத் வழியில் கிலாபத் மலரும் என்ற ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்பு நிகழும்போது ஒற்றுமை தானாக உருவாகும்படி அல்லாஹ்வே ஏற்பாடு செய்து விடுகிறான். மனித முயற்சியால் ஒற்றுமையை ஏற்படுத்த முடியாது. அதை அல்லாஹ்வே தான் ஏற்படுத்துகிறான். அதை நாம் அடையாளம் கண்டால் போதும்; ஒற்றுமையை நோக்கி சென்றடைந்து விடலாம்.

ஆக நுபுவ்வத் வழியில் கிலாஃபத் மலர்ந்ததாய் வாதிப்பது எங்கிருக்கிறது என்பதை தேடுங்கள். அது உங்கள் வேலை. ஒற்றுமையை நோக்கி ஒன்று சேர்ப்பது அல்லாஹ்வின் வேலை. அந்த அதிகாரமும் வேறு யாருக்கும் இல்லை என்பதை உணருங்கள். இன்னும் குர்ஆனின் 24:56வது வசனத்திற்கு இணக்கமான மற்ற சில ஹதீஸ்கள் உள்ளன. இப்னு அம்ரு (ரலி), முஆவியா (ரலி), அம்ர் பின் ஆஸ் (ரலி) ஆகியோர்களால் அறிவிக்கப்படும். இது புகாரி, திர்மிதி அபூதாவூது, முஸ்னது அஹ்மது ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

''நிச்சயமாக இஸ்ரவேலர்கள் 72 பிரிவுகளாக பிரிந்தனர். என்னுடைய இந்த உம்மத் 73 ஆக பிரியும். அதில் ஒன்றைத் தவிர ஏனைய 72 பிரிவுகளும் நரகினை அடைவார்கள் என ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறிய போது அது எது? (அந்த ஒன்று) என சஹாபாக்கள் வினவ, 'நானும், எனது சஹாபாக்களும் போல' வாழ்பவர்கள் எனக் கூறினார்கள்.

இந்த ஹதீஸை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். சுவனம் செல்லக் கூடிய அந்த ஒரு ஜமாஅத் என்பது எங்களுடையது தான் என்றும் எல்லோரும் சொல்கிறார்கள். எல்லோரும் மற்ற மற்ற பிரிவுகளை கலைத்து விடுங்கள். எல்லோரும் எங்களுடன் வந்து சேர்ந்து விடுங்கள். ஒற்றுமையாய் வாழலாம் என எல்லாப் பிரிவுகளும் ஒரே மாதிரியாய் கூறுகிறார்கள். அதற்கு அவர்களுடைய அடையாளப் பெயர்களைப் பொருத்தியும் காட்டுவார்கள்.

உலகின் அனைத்துப் பிரிவுகளும் 'நானும், என் சஹாபாக்களும் போல' என்பதற்கு பொருள் கொடுக்கட்டும்; விளக்கம் தரட்டும். பொருந்தினால் ஏற்றுக் கொள்வோம். ஆனால் அந்த விளக்கத்திற்கு பொருத்தமானதாக ஒரே ஒரு ஜமாஅத்தை மட்டும் தனியாக அடையாளம் காட்ட வேண்டும். அதே நேரத்தில் அந்த விளக்கத்தை

**Parveen Enterprises**
Dealers : Papers, Boards &
Binding Materials
Vadapalani, Chennai 600 026.

**M.Rafique & Sons**
Exporters And Agents
U55, 9th St, Anna Nagar, Chennai-40.
Ph : 2628 1531, Fax : 2628 1532

மற்ற பிரிவுகளை சேர்ந்தவர்கள் ''எங்களுக்கு இது பொருந்தாது'' என 72 பிரிவுகளும் விலக வேண்டும். இதுதான் நிபந்தனை. நபியும், சஹாபாக்களும் சுன்னத்தை கடைப் பிடித்தார்கள். அதனால் அது சுன்னத் ஜமாத்அ தான் என்றால் மற்ற பிரிவுகள் 72ம் நாங்கள் சுன்னத்தை கடைப்பிக்கவில்லை. இது எங்களுக்கு பொருந்தாது என்று கூறி விலக வேண்டும். இதுபோல் நபியும் சஹாபாக்களும் தவ்ஹீதை போதித்தார்கள். அதனால் தவ்ஹீது ஜமாஅத் என பொருள் கொடுத்தால், மற்ற பிரிவுகள் 72ம் நாங்கள் தவ்ஹீதை போதிக்கவில்லை; இது எங்களுக்கு பொருந்தாது என்று கூறி விலக வேண்டும். இப்படியாக தப்லீக் செய்தார்கள் அதனால் தப்லீக் ஜமாஅத் என்றோ, ஜிஹாது செய்தார்கள். மனித நீதிப் பாசத்தை காட்டினார்கள் என்றோ எப்படி வேண்டுமானாலும் பொருள் கொடுங்கள். ஒரே ஒரு ஜமாஅத்துக்கு மட்டும் பொருத்துங்கள். அதை மற்ற 72 பிரிவுகளும் ஒப்புக் கொண்டு விலகுவதையும் காட்டவேண்டும். அவ்வாறு நீங்கள் ஒருபோதும் செய்து காட்ட முடியாது. முடியவே முடியாது. இது மிகமிக ஆணித்தரமான உண்மை.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் ஒற்றுமையை நோக்கி மக்கள் ஒன்றுபட கூறிய முன்னறிவிப்பை, 'மீண்டும் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் மலரும்' என்ற ஹதீஸ் விளக்கத்தை பொருத்திப் பாருங்கள். 'நானும் என்றால் நபியின் நுபுவ்வத், ஸஹாபாக்கள் என்றால் ஸஹாபாக்களின் கிலாஃபத்தும் உங்களுக்கு இருக்கிறதா? என வினவுங்கள். ஒரே ஒரு ஜமாஅத்தைத் தவிர மற்ற அனைத்து 72 பிரிவுகளும் இது எங்களுக்கு பொருந்தாது எனச் சொல்லி விலகும். சாட்சி கூறும். அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தில் அந்த நுபுவ்வத்துடன் கிலாஃபத் மலர்ந்து உலகின் 198 நாடுகளில் ஒரே ஜமாஅத்தாக 20 கோடி மக்கள் ஒற்றுமையுடன் வாழ்வதை அறிந்து கொள்ளுங்கள். அந்த ஒற்றுமையை அல்லாஹ்வே ஏற்படுத்தித் தந்திருக்கிறான். அதல்லாமல் நுபுவ்வத் வழியில் கிலாஃபத் இன்றி ஒருபோதும் ஒன்றுபடவே முடியாது. அல்லாஹ் அப்படி விடவே மாட்டான். ஒற்றுமைக்கு இறைவன் வகுத்த வழியின் பக்கம் வாருங்கள். அதில்தான் ஈடேற்றம் இருக்கிறது.

---

18ஆம் பக்க தொடர்ச்சி ...

பற்றியும் அவற்றின் பதில்களைப் பற்றியும் அஹ்மதிப் பெண்களுக்கு அறிவுறுத்தல், திருக்குர்ஆனை மனனம் செய்தல் போன்ற காரியங்களுக்காகத் திட்டங்கள் அறிவிக்கப் பட்டன.

இவ்வாறு தமது அருளுக்குரிய கிலாஃபத் காலம் முழுவதும் தமது சொல்லாலும், செயலாலும், இறையுதவிகளாலும் ஜமாஅத்தின் செயல்பாட்டில் ஓர் உயிர்த்துடிப்பை ஏற்படுத்திய ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19 ஆம் நாள் காலை இறைவனடி சேர்ந்தார்கள்.(இன்னாலல்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்) அவர்கள் ஜனஸா இலண்டனில் உள்ள இஸ்லாமாபாத் நகரில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜமாஅத்தின் செயல்பாட்டில் ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தி, அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் வரைபடத்தில் மாபெரும் வளர்ச்சியை ஏற்படுத்திய அந்த தூய ஆன்மாவை ஜமாஅத் என்றென்றும் நினைவு கூறும் (இன்ஷா அல்லாஹ்) இறையருள் பெற்ற மகான்களில் அவர்களும் ஒருவர்!

(The Review of Religions) 2008 ஏப்ரல் இதழில் வெளிவந்த கட்டுரையை தழுவி எழுதப்பட்டது.

தொகுப்பு

**S.S.H. முஹம்மது லப்பை**

# NABI VAZHI Tamil Monthly May 2009

**Registered with the Registrar of News Paper of India at No.TN/TAM/05/15211**


## கடலூரில்

# ஒருநாள் தர்பிய்யத் முகாம்

அல்லாஹ்வின் அருளால் கடந்த ஏப்ரல் 12-ம் நாள் ஞாயிறு அன்று புதுச்சேரி, கடலூர், பண்ருட்டி மற்றும் திட்டச் சேரி ஆகிய ஊர்களிலுள்ள அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்துகள் இணைந்து ஒருநாள் தர்பிய்யத் முகாம் கடலூரில் நடத்தியது.

முதல் அமர்வு காலை 10.45 மணிக்கு தமிழக வட மண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது சாஹிப் அவர்களின் தலைமையில் துவங்கியது. சென்னை செயிண்ட் தாமஸ் மவுண்ட் கொள்கை பரப்புநர் மவ்லவி K. மஹ்மூது அஹ்மது H.A. அவர்கள் கிராஅத் ஓதினார்கள். ஜனாப் T.J. முனவ்வர் இப்ராஹீம் சாஹிப் அவர்கள் தமிழாக்கத்தை வாசித்தார்கள். அதைத் தொடர்ந்து கடலூர் கொள்கை பரப்புநராகிய நான், தர்பிய்யத் முகாமின் நோக்கமும் அவசியமும் என்ற தலைப்பில் உரையாற்றினேன். அடுத்து புதுச்சேரி கொள்கை பரப்புநர் மவ்லவி அபுல் ஹஸன் ஆபித் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அகில உலகங்களுக்கும் ஓர் அருட் கொடை என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அடுத்து உரை நிகழ்த்திய பண்ருட்டி ஜமாஅத்தின் முஅல்லிம் ஜனாப் M. முஸ்ஸம்மில் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் தோற்றம் பற்றி எடுத்துக் கூறினார்கள்.

இதன் பிறகு, கேள்வி பதில் நிகழ்ச்சி ஆரம்பமானது, அதில் பல்வேறு ஊர்களிலிருந்து வந்திருந்த சகோதர, சகோதரிகள் கேட்ட மார்க்கம் சம்பந்தமான கேள்விகளுக்கு தக்க பதில் கொடுக்கப்பட்டன. இத்துடன் முதல் அமர்வு இனிதே முடிந்தது.

ளுஹர் அசர் தொழுகை மற்றும் மதிய உணவிற்குப் பிறகு பகல் 2.45 மணிக்கு மவ்லவி அபுல் ஹஸன் ஆபித் அவர்களின் திருக்குர்ஆன் கிராஅத்துடன் இரண்டாம் அமர்வு துவங்கியது. பண்ருட்டி ஜமாஅத் தலைவர் ஜனாப் அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் மொழியாக்கத்தை வாசித்தார்கள். ஜனாப் T.J. முனவ்வர் இப்ராஹீம் அவர்கள் உருது கவிதை பாடினார்.

அடுத்து மவ்லவி K. மஹ்மூது அஹ்மது H.A. அவர்கள் 'இஸ்லாத்தில் ஹராமாக்கப்பட்டவையும் அதன் தத்துவமும்' என்ற தலைப்பில் உரையாற்றினார்கள். அதைத் தொடர்ந்து மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A. அவர்கள் 'இஸ்லாத்தில் பொருள் தியாகம்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார்கள். இரண்டாம் அமர்விலும் கேள்வி - பதில் நிகழ்ச்சி தொடர்ந்தது. வருகை தந்திருந்தவர்கள் கேட்ட பல்வேறு கேள்விகளுக்கு மவ்லவி மஹ்மூது அஹ்மது சாஹிப், மவ்லவி முஸ்ஸம்மில் அஹ்மது சாஹிப் ஆகியோர் பதிலளித்தனர்.

இறுதியில் வடமண்டல அமீர் ஜனாப் M. பஷாரத் அஹ்மது சாஹிப் அவர்கள் நிறைவுரையாற்றி துஆ செய்து மாலை 5 மணிக்கு கூட்டத்தை நிறைவு செய்தார்கள்.

இந்த ஒருநாள் தர்பிய்யத் முகாமில் புதுச்சேரி, கடலூர், பண்ருட்டி, பூம்புகார் மற்றும் சென்னை ஆகிய ஊர்களிலிருந்து சகோதர சகோதரிகள் கலந்து கொண்டனர். இதைத் தவிர அஹ்மதியல்லாத சகோதர, சகோதரிகளும் கலந்து கொண்டு கேள்விகள் கேட்டு பதில்களை அறிந்து பயன் பெற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

தகவல் : **மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது**
**கொள்கை பரப்புநர், கடலூர்**


If undelivered please return to:

முகவரி : நிர்வாகி - **நபி வழி**
**அஹ்மதிய்யா முஸ்லிம் மிஷன்**
11, முதல் பிரதான சாலை, யு.ஐ. காலனி,
கோடம்பாக்கம்,சென்னை-24. Ph : 24817174

Printed & Published By : **K. NASIR AHMED**
From: No.11, First Main Road, U.I. Colony, Kodambakkam, Chennai-24. Ph : 2481 7174.
Editor : **O.M. MUZZAMMIL AHMAD**.
Printed at : **Script Printers**, Periyar Pathai Choolaimedu, Chennai - 600094.